Koviloor Digital Library

வள்ளலார் அருளுரை

சன்மார்க்க திங்களிதழ்

நிரந்தர ஆசிரியர்
திருவருட்பிரகாச வள்ளலார்
பெருமான் இறைவடிவம் பெற்ற ஆண்டு 115

ஆசிரியர்
S. இராசன்

அருள் 7 | ஆகஸ்ட், செப்டம்பர்—1989 | உரை 6-7



KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 5150

கோவிலூர் மடாலயம்
KOVILOOR MADALAYAM



Koviloor Digital Library

சம்பந்தமுடையவராகுங்கள்

மனித தேகத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அடைய வேண்டிய ஆன்ம லாபமாகிய முத்திறல் தேகசித்தியாகிய பேரின்ப (நித்திய) பெருவாழ்வை, இறை வடிவை 1874ல் வள்ளற்பெருமான் பெற்றார். வள்ளற்பெருமான் சித்திப் பெற்ற சித்திவளாக திருமாளிகை திருஅறையினை தரிசிக்கவும், அவர் ஏற்றி வைத்த சத்திய ஞானதீபத்தை வழிபட்டு திருவருள் பெற்றுய்யவும் வருகின்றனர். தைப்பூசத்தில் இலட்சக்கணக்கிலும் மற்றும் விழாக்காலங்களில, மாதப் பூசத்தில் ஆயிர கணக்கில் வருகின்றனர். சாதாரண நாட்களிலும் பலர் வடலூருக்கும் சித்திவளாகத்திற்கும் வருகின்றனர்.

இங்கு சென்னை அன்னதான சாலை என்ற பெயரில் ஒரு பெரியகட்டிடத்திருப்பணிநடை பெறுகிறது. சென்ற தைப் பூசத்தில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு பசியாற்றுவித்து தங்கவும் வசதி செய்து தந்தோம் அன்னதானத்திற்கு ரூ. 1000 கொடுப்பவர்கள் இங்குள்ள கல்வெட்டில் பெயர் பொறிக்கப்படுகிறது. அப்பணம் வங்கியில் நிரந்தர வைப்பு நிதியாக இருக்கும் அதற்கு வருடத்தில் ரூ 120வட்டிவரும். அதனைக் கொண்டு ஒருநாள் சாப்பாடு செய்வதற்கு ஒதுக்கப்படும். பிரதிமாதம் ரூ 10 - செலுத்தியோ, அல்லது வருடம் ரூ-120 செலுத்தியோ அன்னதான சாலைக்கு சம்பந்தமுடையவர்களாகுங்கள் என வேண்டுகிறோம். தொடர்புகொள்ள வேண்டிய இடம்:

திருவாகி, வீர. சண்முகனார்
சென்னை அன்னதான சாலை சித்திவளாகம்,
மேட்டுக்குப்பம் (P.O.) வடலூர் (வழி) 607803 (தெ ஆ)

சென்னை 49 வில்லிவாக்கம் தேவர் தெரு சிங்காரம் பிள்ளை ஆரமப பள்ளியில் 18-6-89 ஞாயிறு காலை 7 முதல் 2 வரை கீழ்கண்ட விழாக்கள் நடைபெற்றன. 1. சங்கத்தின் 7ம் ஆண்டு விழா 2. தினசரி கஞ்சி வழங்குதல் 4ம் ஆண்டு விழா 3. வடலூர் தருமச்சாலை 123ம ஆண்டு விழா. பிரதி ஆங்கிலமாதம் 2வது வெள்ளியாலை 6 முதல் 8 வரை சன்மார்க்க விளக்கம் பிரதிஞாயிறு காலை 7 முதல் 9 வரை திரு அகவற்பாராயணம் வில்லிவாக்கம் அகஸ்தீசுவரா கோயில் எதிர்புற மண்டபத்தில்நடைபெறும் ரெட்ஹில்ஸ் ரோடு 50-ல் உள்ள வள்ளலார் பணி மன்றத்தில் தினமும் மதியம் 11 முதல் 12 வரை பசிதவிர்த்தல் நடைபெறும்.

Koviloor Digital Library

திருவருட்பெருஞ்ஜோதி அகவல் தெளிவுரை 16

வ.மு.ரா.

581. எவ்வகைத் திறத்தினும் எய்துதற்கு அரிதாம்
அவ்வகைநிலை எனக்கு அளித்த நல்தந்தையே

எல்லா வகையிலும் முயன்று யாராலும் அறிய முடியாத மிக உயர்ந்த நிலையை எனக்கு அளித்த என்னுடைய நல்ல தந்தையே வந்தனம்.

582 இனிப்பிறவாநெறி எனக்கு அளித்து அருளிய
தனிப் பெருந்தலைமைத் தந்தையே தந்தையே

இனிமேல் பிறப்பில்லாத நிலைதான் நித்தியநிலை. இந்தநிலையை எனக்கு அருளிய ஒப்பற்ற பெருந்தலைவராகி தொடர்ந்து தந்தையாய் இருப்பவரே வந்தனம்

583 பற்று அயர்ந்து அஞ்சிய பரிவு கண்டு அனைந்துஎனை
சற்றும் அஞ்சேல் எனத் தாங்கிய துணையே

அச்சம் என்பது தெய்வ பற்றை (அன்பை) கைவிடும் போது தான் தோன்றுகிறது. இவ்வாறு எனக்கு ஏற்பட்ட அயர்ச்சியையும் அச்சத்தையும் அன்போடு நீக்கி அருளி என்னை நெருங்கி சிறிதும் அஞ்சாதே என்று சொல்லி தாங்கிய துணைவரே வந்தனம்.

துணை என்பது மனைவியைக் குறிக்கும். இறைவனை தலைவராகக் கொள்வது மட்டுமல்லாமல் தலைவியாகக் கொள்வதும் உண்டு. பெருமானுக்கு அருள் திருவை திருமணம் செய்வது என்பது இது தான். இறைவரே தலைவியாக மாறுவது தான். அவத்தை = அனுபவம் வாழ்க்கை துணை நலம் என்பது வாழ்க்கைக்குரிய மனைவி யின் நலமாகும். பற்று அயர்ந்து அஞ்சிய பரிவு என்பது உறுதியாக பிடித்து நிற்க வேண்டிய ஒன்றை கைவிடும் போது அச்சம் தோன்றுகிறது. அதனால் புதிய அன்பும் தோன்றுகிறது. இது தான் உயர்ந்த அன்பு ...

Koviloor Digital Library

584. தளர்ந்த அத்தருணம் என்தளர்வு எலாம் தவிர்ந்து உள்
கிளர்ந்திட எனக்குக் கிடைத்த மெய்த்துணையே

அன்பை கைவிட்டு களைப்படையும் போது அந்த களைப்பை நீக்கி உள்ள கிளர்ச்சி உண்டாகும்படி எனக்கு கிடைத்த உண்மையான துணையே வந்தனம்,

மெய் என்பதற்கு இரு பொருள் உண்டு. ஒன்று உடம்பு, மற்றொன்று உண்மை. உடம்பு துணையாக மனித வடிவத்தில் வரும் மனைவியையும், உண்மைத் துணையாக. உயிர் துணையாக இறைவன் வடிவத்தில் மனைவியாக வரும் அருள் ஒளித் திருவை குறிப்பிடவாம்,

585. துறை இதுவழி இது துணிவுஇது நீசெயும்
முறை இது எனவே மொழிந்த மெய்துணையே

துறை, வழி, துணிவு, முறை என நான்கையும் தெளிவாக எனக்கு எடுத்து சொல்லிய உண்மைத் துணையே வந்தனம்.

586. எங்குறு தீமையும் எனைத் தொடராவகை
கங்குலும் பகலும் மெய்க்காவல் செய்துணையே

எந்த இடத்திலிருந்தும் வந்து உயிருக்கு தீங்கு செய்ய கூடிய அனைத்தையும் விலக்குவதற்கு இரவும் பகலும் இடையறாது காவல் செய்கிற துணையே வந்தனம்.

587. வேண்டிய வேண்டிய விருப்பெலாம் எனக்கே
ஈண்டு இருந்து அருள்புரி என் உயிர்த்துணையே

எனக்கு எவ்வப்போது என்னென்ன வேண்டுமோ அவற்றை எல்லாம் என் உள்ளேயே இருந்து கொடுத்து கொண்டிருக்கும் உயிர்துணையே வந்தனம்.

உயிருக்கு உயிராக இருப்பது கடவுள்ஒன்றே. ஆதலின் உயிர்த்துணை, உயிர் நட்பு, உயிர்ஒளி முதலிய தொடர்கள் தெய்வ சம்பந்தம் உடையனவாகும்.

Koviloor Digital Library

588. இகத்தினும் பரத்தினும் எனக்கு இடர்சாராது
அகத்தினும் புறத்தினும் அமர்ந்த மெய்த்துணையே

இம்மையிலும், மறுமையிலும் துன்பம் நெருங்காத படி உள்ளும் புறமுமிருந்து காவல் புரியும் உண்மை துணையே வந்தனம்.

இகம், பரம், அகம், புறம் என்ற தொடர்கள் எங்கும் என்ற பொருளில் அமைகின்றன.

589. அயர்வு அற எனக்கே அருள்துணை ஆகிஎன்
உயிரினும் சிறந்த ஒருமை என்நட்பே

அயர்வுறுவது அருள்துணை இல்லாத போதுதான். அருளே துணையாகி உயிருக்கு உதவி செய்வதால் அயர்வு தீர்க்கும் அருள் வழங்கப்படுகிறது. இவ்வாறு என் உயிரினும் மேலான ஒருமை உணர்வுடைய நண்பரே வந்தனம்.

590. அன்பினில் கலந்து எனது அறிவினில் பயின்றே
இன்பினில் அளைந்த என் இன் உயிர் நட்பே

அன்பு உயிர்களை கலந்து வாழும்படி செய்கிறது அறிவு வாழ்க்கைக்கு வேண்டிய பயிற்சியைத் தருகிறது. இன்பம் இப்பயிற்சியின் விளைவாக உண்டாவதுதான். இத் தகைய அன்பை வழங்கிவரும் இனிய உயிர் நண்பரே வந்தனம்.

அளை — அள் வேர்ச்சொல். அள்ளி அள்ளிக் கொடுக்கும் அளவு நெருங்கி இருப்பதைக் குறிக்கிறது. அளை—வளை அளைந்த—கலந்த உள்ளே புகுந்து அமைதியாக இருப்பதற்குரிய இடம்.

591. நான் புரிவன எலாம் தான் புரிந்து எனக்கே
வான்பதம் அளிக்க வாய்த்த நல்நட்பே

நான் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் தாங்களே செய்து எனக்கு எங்கும் பரவியிருக்கும் பதவியை கொடுப்பதற்கு வாய்த்திருக்கும் நல்ல நண்பரே வந்தனம்;

Koviloor Digital Library

[ை வான் பதம்=எங்கும் பரவியிருக்கும் நிலை. "வான் செய்து கொண்டது நான் செய்து கொண்டேன்" பெருமான் வாக்கு.

592. உள்ளமும் உணர்ச்சியும் உயிரும் கலந்துகொண்டு
எள்ளுறு நெய்யில் என் உள்ளுறு நட்பே

மனம், உணர்வு, உயிர் என்ற மூன்றிலும் கலந்து எள்ளில் கலந்திருக்கும் எண்ணெ போல என்னுள் கலந்திருக்கும் நண்பரே வந்தனம்,

593. செற்றமும் தீமையும் தீர்த்து நான்செய்த
குற்றமும் குணமாக கொண்ட என் நட்பே

என்னுடைய சினம், அதனல் வரும் தீமை முதலியவற்றை நீக்கி அருளியதால் நான் செய்த குற்றத்தையும் குணமாகக் கொண்ட நண்பரே வந்தனம்.

உலக நோக்கத்தில் (பார்வை) குற்றமாக தோன்றுவதும் இறைவன் பார்வையில் குணமாகி விடுகிறது சாக்கிய நாயனர் எறிந்த கல்லேயும மலராக மதித்தார் இறைவர்.

594. குணம் குறி முதலிய குறித்திடாது எனையே
அணங்கற கலந்த அன்புடை நட்பே

நல்ல குணம், உருவம் முதலியவற்றை நோக்காமல் என்னை சிறு தெய்வம் வந்து தாக்காமல் என்உடல், மனம் உயிர் என்ற மூன்றிலும் அன்புடன் கலந்திருக்கும் நண்பரே வந்தனம்.

அணங்கற=சிறு தெய்வத்தாக்குதல் நீக்க

595. பிணக்கும் பேதமும் பேய் உலகோர்புகல்
கணக்கும் தீர்த்து எனைக் கலந்த நல்நட்பே.

முரண்பாடும் வேறுபாடும் இந்தபேய் உலகோர் வழங்கும் போலி கணக்கும் தீர்த்து என்னை கலந்திருக்கும் நண்பரே வந்தனம்.

Koviloor Digital Library

596- சவலை நெஞ்சத்தின் தளர்ச்சியும் அச்சமும்
கவலையும் தவிர்த்து எனைக் கலந்த நல்நட்பே

சவலை நெஞ்சம் என்பது அன்புக்காக ஏங்குகிற நெஞ்சம், அதனால் ஏற்படுவனவே தளர்ச்சி, அச்சம், கவலை போன்றவை. இவற்றையெல்லாம் தீர்த்துவிட்டு என்னோடு கலந்திருக்கும் நண்பரே வந்தனம்.

597. களைப்பறிந்து எடுத்துக் கலக்கம் தவிர்த்து எனக்கு
இளைப்பறிந்து உதவிய என் உயிர் உறவே

களைப்பு ஏற்படுகிறபோது என்னை தூக்கி, எனக்கு ஏற்பட்ட கலக்கத்தை தவிர்த்து, அவ்வப்போது எனக்கு ஏற்படும் இளைப்பையும் நீக்கி உதவுகிற என் உயிர்போன்ற உறவினரே வந்தனம்.

598. தன்னைத் தழுவுறும் தரம் சிறிது அறியா
என்னைத் தழுவிய என் உயிர் உறவே

உயிருக்கு உயிரான இறைவனைத்தழுவும் ஆற்றல் உயிருக்கு இல்லை. இறைவனுக்கு உயிரைத் தழுவும் பேராற்றல் உண்டு எனவே என்னை தழுவி எடுத்து வளர்த்து வரும் என் உயிர் உறவே வந்தனம்.

599, மனக்குறை நீக்கி நல்வாழ்வு அளித்து என்றும
எனக்கு உறவாகிய என் உயிர் உறவே

மனதில் அவ்வப்போது ஏற்படும் குறைகளை நீக்கி நடுநிலை தவறாது பெருவாழ்வை எனக்கு கொடுத்து அவ்வப்போது எனக்கு உறவாக விளங்கும் என உயிர் உறவே வந்தனம்.

600. துன்னும் அனாதியே சூழ்ந்து எனைப் பிரியாது
என் உறவாகிய் என் உயிர் உறவே

நெருங்கும் நிலை எப்போது என்று அறிய முடியாத பழமையுடையது தெய்வ தன்மை. இவ்வாறு எப்போதும் என்னை பிரியாமல் இருந்து உதவும் உறவாகிய என் உயிர் உறவே வந்தனம்,

Koviloor Digital Library

இறைவன் எப்போது இருந்திருக்கிறானோ அப்போதிருந்தே உயிரும் இருக்கிறது. இதைத்தான் "என்று நீ அன்று நான்" என்பர் தாயுமானார். அன்+ஆதி= தொடக்கமின்மை, பழமை. அன் + அகம் = அனகம். அகத்திலிருந்து விரிவடைந்து புறத்தையும் தன்வயப் படுத்தி கொள்வது. அன்+ஏகம்=அநேகம், பல. முன்னேற்றம் என்பது உள்ளிருந்தே வருவதாகும், Progrees must come from with in கட்டிக் கொடுத்த சோறும், சொல்லி கொடுத்த சொல்லும் எப்போதும நிற்பன அல்ல துன்னும் = நெருங்கும்

601, என்றும் ஓர் நிலையாய் என்றும் ஓர் இயலாய்
என்றும் உள்ளதுவாம் என் தனிச் சத்தே

எப்போதும் மாறுமல் இருக்கும் தன்மை எப்பொருளுக்கும் உண்டு. இத்தகைய தன்மையை அளித்து நிலையாக வாழ்விக்கும் என்னுடைய ஒப்பற்ற உண்மையே வந்தனம்.

சத்து=சத்தியம், ஆற்றல், எல்லாப்பொருளும்,எல்லா ஆற்றலும், எப்போதும் அழிவன அல்ல. வடிவ வேறுபாடு பெறலாம், இதுவே இராசாயன விஞ்ஞானத்திலும், பௌதிக விஞ்ஞானத்திலும் அழியாமை குறிக்கும் விதியாகும், பொருள் ஆற்றலாகும். ஆற்றல் பொருளாகும் அவ்வளவே; அழிவதில்லை. E=Mcc - E=ஆற்றல், M= பொருள், C=ஒளியின் வேகத்தைக் குறிக்கிறது.

602. அனைத்து உலகு அவைகளும் ஆங்காங்கு உணரினும்
இனைத்து என அறியா என் தனிச்சத்தே

உலக முழுவதும் சென்று பார்த்தாலும் இந்த தன்மையுடையது என்று அறிய முடியாதது என்று போற்றுகிற ம் உண்மை துணையே வந்தனம்.

Koviloor Digital Library

603. பொதுமறை முடிகளும் புகலவை முடிகளும்
இது எனக்கு அரிதாம் என் தனிச்சத்தே.

பொதுவான வேதங்களின் முடிவுகளும் அவைகளின் விளைவாகிய திருவடி நூல்களின் முடிவுகளும் சேர்ந்து இந்த தன்மையையுடையது என்று சொல்லமுடியாத ஒப்பற்ற உண்மையே வந்தனம்.

604. ஆகம முடிகளும் அவை புகல் முடிகளும்
ஏகுதற்கு அரிதாம் என் தனிச் சத்தே

வேதங்களின் முடிவுகளால் அறிந்து அனுபவத்திற்கு கொண்டுவர முடியாதவைகளை அனுபவ சாத்தியம் ஆக்குவன ஆகமமுடிவுகள்: அவைகளாலும் சென்று காணமுடியாத என் ஒப்பற்ற உண்மையே வந்தனம்.

வேதங்கள், ஆகமங்கள் என்ற இரண்டிற்கும் எட்டாத நிலையில் உள்ளதே அருட்பெருஞ்ஜோதி

ஏகுதல் = செல்லுதல்

605. சத்தியம் சத்தியம் சத்தியம் எனவே
இத்தகை வழுத்தும் என் தனிச் சத்தே

அருட்பெருஞ்ஜோதியே முக்காலத்திற்கும் பரிபூரணமான உண்மை என்று பாராட்டப்பெறும் என்னுடைய அனுபவத்தில் வந்த ஒப்பற்ற உண்மையே வந்தனம்,

சத்தியம் என்பதை மூன்று முறை திருப்பி சொல்லியதால் உண்மை, முழு உண்மை, உண்மை தவிர பிறிது எதுவும் இல்லை என்ற முழு உண்மை விளக்கம் கிடைக்கிறது அது முத்திறல் வடிவத்தையும் குறிக்கும்.

606. துரியமும் கடந்தது ஓர் பெரியவான் பொருள் என
உரைசெய் வேதங்கள் உன்னும் மெய்ச்சத்தே

துரியம் என்பது துயில் முதலிய மூன்றையும் கடந்த 4வது அனுபவம். இதைக் கடந்த பரிபூரணமான இன்ப

Koviloor Digital Library

வடிவமே துரியாதீதம் என்பது. இவ்வாறு சான்றோர் சொல்லி பாராட்டுகின்ற உண்மை இன்ப ஆற்றலே வந்தனம்.

வேதங்கள் இந்த கருத்தை உணர்ந்திருக்கின்றன. ஆனால் வேதங்களின் ஆறு அங்கங்களும ஆறு தரிசனங்களும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை செயலில் அனுபவிக்க வழிகாட்ட வல்லே. ஆனால் வள்ளற்பெருமான் இன்றும் அனுபவித்து வருகிறார்

பெருவெளியை துரியம் என்றும், பெருஞ்சுக வெளியை துரியாதீதம் எனபர் பெருமான். துரியாதீதம் — பேரின்பம், அழியாத இனபம். உரைசெய் வேதம் என்பது பாராட்ட படுகின்ற அருள் ஆற்றலால் உடம்பை இறைவன் வேதிப்ப தாகும். ஆதிநீதிவேதனே என்பது இதனைக்குறிக்கும்.

607. அன்று அதன் அப்பால் அதன் பரத்து அது தான்
என்றிட நிறைந்த என் தனிச்சத்தே

ஒவ்வொரு பொருளையும் இது அன்று இது அன்று என்று சொல்லிக்கொண்டே சென்றால் எல்லாவற்றிற்கும அப்பாலிருப்பதோடு அப்பொருள்களின் உள்ளேநிறைந்து இருப்பதே என்று பாராட்டும் என் ஒப்பற்ற உண்மை ஆற்றலே வந்தனம்.

"அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் கணு முற்றி நின்ற கரும்பு" என்பர் அவ்வையார். இதன் பொருள் கடவுள் ஒருவரே பரிபூரணமான இன்பம் தரும் பொருளாகும் என்பது.

608. என்றும் உள்ளதுவாய் எங்கும் ஓர் நிறைவாய்
என்றும் விளங்கிடும் என் தனிச்சத்தே

எல்லாக் காலத்திலும் இருப்பதும் எல்லா இடத்திலும் நிறைந்ததும் எப்போதும் விளங்கிக் கொண்டிருப்பது மாகிய எனது ஒப்பற்ற அறிவே வந்தனம்.

Koviloor Digital Library

சத்து சித்து ஆனந்தம்=சச்சிதானந்தம், மெய்யறிவு இன்பம் நித்தியானந்தம்=நிலையான இன்பம். இதுவே பெருவாழ்வு உண்மையின் விளக்கம் எப்போதும் எங்கும் விளங்கிக் கொண்டிருக்கும் இன்பம்.

609. சத்திகள் பலவாய்ச் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கும் என் தனிச்சத்தே

மாமனித நிலையில் அருள் நிரம்ப உடையவர்களை சத்திகள் என்பர், ஆற்றல் நிரம்ப உடையவர்களை சத்தர்கள் என்பர். இத்தகைய பலரும் எனக்கு ஏவல் புரியும்படி விளங்கி வருகின்ற ஒப்பற்ற அறிவே வந்தனம்

610. தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய்
இத்தகை விளங்கும் என் தனிச் சத்தே

தத்துவம் என்பது உடல் கூறுகளை குறிப்பது, தத்துவி என்பது அவற்றில் குறைபாடுகள் இல்லாதவர்களை குறிப்பது. இவ்வாறு ஆற்றல் நிரம்பிய அனைவருமாய் எனக்கு விளங்கும் ஒப்பற்ற அறிவு வடிவமே வந்தனம்.

611. படிநிலை பலவாய்ப் பதநிலை பலவாய்
இடிவு அற விளங்கிடும் என் தனிச்சித்தே

பல படிகளில் அறிவும் செயலும் உயரும்போது பல பதவிகள் கிடைக்கின்றன. இப்பதவிகள் தகர்ந்து விடாமல் காத்து விளங்கிக் கொண்டிருக்கும் எனது ஒப்பற்ற அறிவு வடிவமே வந்தனம்.

612. மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்
ஏற்பட விளக்கிடும் என் தனிச் சத்தே

மூர்த்திகள் ஐந்தொழில் புரிபவர்கள். மூர்த்திகள் ஐந்தொழில் புரிபவர்களுக்கு பக்கபலமாக உள்ளவர். இவ்வாறு ஐந்தொழிலை செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்களும் அதை எங்கும் பரப்ப துணைபுரிபவர்களும் விளக்கும்படி என் ஒப்பற்ற சித்தாக விளங்கும் தலைவரே வந்தனம்.

Koviloor Digital Library

சித்து என்பது அறிவுசெயலையும் அறிய செயலையும் குறிக்கும்.

613. உயிர் வகை பலவாய் உடல்வகை பலவாய்
இயலுற விளக்கிடும் என் தனிச்சித்தே

உயிர்கள் வளர்கின்ற இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்ப பலவகையான உடல்களைப் பெறுகின்றன. இவ்வாறு உயிர்ப் பணிபுரியும் இறை ஆற்றல் விளங்கும்படி என்னை உயர்த்தி வைத்திருக்கும் ஒப்பற்ற அற்புதமே வந்தனம்.

இயலுற என்பது இயற்கையாக செயல் புரியும் பழக்கத்தை குறிக்கிறது. ஏகசிற்சித்தியே இயல்+உற அநேகம் ஆகியது என்பது கவனிக்கத்தக்கது.

614. அறிவவை பலவாய் அறிவன பலவாய்
எறிவற விளக்கிடும் என் தனிச் சித்தே

அறிவவை என்பது அறியப்படும் பொருள்கள். அறிவன என்பது] அறிகின்ற உயிர்கள், இவ்விரண்டிலும் பலவகை உண்டு. இவை ஒன்றோடொன்று மோதிஅழிந்து போகாமல் இருப்பது எப்படி என எனக்கு விளக்கி அருளிய இயற்கை விளக்கமே வந்தனம்.

எறிவுஅற—அழிந்து போகாமல்

615. நினைவவை பலவாய் நினைவன பலவாய்
இனைவற விளக்கிடும் என் தனிச் சித்தே

நினைவவை—நினைக்கின்ற உயிர். நினைவன—நினைக்கக் கூடிய அறிவுவகை. இவற்றில் பலவகை உண்டு இவை துன்புறாமல் எப்படி காத்து பணிபுரிவது என்று எனக்கு அறிவித்த ஒப்பற்ற இயற்கை விளக்கமே வந்தனம்

இனைவுஅற—துன்பம் நீங்க

Koviloor Digital Library

616. காட்சிகள் பலவாய்க் காண்பன பலவாய்
ஏட்சியின் விளக்கிடும் என் தனிச் சித்தே

காட்சிகள் — காணும் செயல்களை, காண்பன— காணும் பொருள்களைக் குறிக்கும். பொருள்களும், செயல்களும் பலவகையாகவே அமைந்திடும். இவற்றில் தவறு ஏற்படாமல் எனக்கு விளக்கி அருளும் என் ஒப்பற்ற இயற்கை விளக்கமே வந்தனம்.

ஏட்சியின்—குற்றமற

617. செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய்
எய்வற விளக்கிடும் என் தனிச் சித்தே

செய்வினை—செய்கின்ற செயல், செய்வன — செய்யப்படும் பொருள்கள் இவ்விரண்டிலும் பலவகைகள் உண்டு. இவற்றை செய்கின்ற நோக்கத்திற்கு குறை ஏற்படாமல் விளக்கி அருளுகிற என் 'ஒப்பற்ற இயற்கை விளக்கமே வந்தனம்.

எய்வுஅற—நோக்கத்தில் குறைவு ஏற்படாமல்

618. அண்ட சராசரம் அனைத்தையும் பிறவையும்
எண் தர விளக்கும் என் தனிச் சித்தே

உலகத்திலுள்ள அசையும் பொருள்களையும் அசையாப் பொருள்களையும் அவற்றின் உள்ளும் புறமும் தோன்றி மறையும் மற்றவற்றையும் துள்ளியமாக நான் அறிந்து கொள்ளும்படி எனக்கு விளக்கி அருளுகிற இயற்கை விளக்கமே வந்தனம்

எண் தர— துள்ளியமாக உணர

எந்தப் பொருளைப்பற்றியும் நன்ருக அறிந்து கொள்வதற்கு அது எத்தனை என்ற எண் குறிப்பு இன்றியமையாதது. எண்ணை விட்டு விட்டு எதனையும் எண்ணிப்பார்க்க முடியாது. "எண்ணும் எழுத்தும் சொல்ஆனாய் போற்றி" என்பர் அப்பர், இதில் சொல்லுக்கு அடிப்படையே எழுத்-

Koviloor Digital Library

தன்று எண்தான். எண்ணிப்பார்த்த பிறகே எழுதிப் பார்க்கிறோம். சொல்=(எண்+எழுத்து)

619. எல்லாம் வல்ல சித்து எனமறை புகன்றிட
எல்லாம் விளக்கிடும் என் தனிச்சித்தே

எல்லாவற்றையும் செய்யவல்ல அருஞ்செயல் இது என வேதங்கள் பாராட்டுகின்ற எல்லாம் எனக்கு விளங்கும்படி செய்தருளுகிற இயற்கை விளக்கமே வந்தனம்

620. ஒன்று அதில் ஒன்று என்று உரைக்கவும் படாதாய்
என்றும் ஓர் படித்தாம் என்தனி இன்பே

ஒரு பொருளினுள் இருக்கும் மற்றொரு பொருள் என்று சொல்லிவிட முடியாமல எப்போதும் ஒரே தன்மையதாய விளங்கும் என் இயற்கை இன்பமே வந்தனம்

ஓர் படித்தாம்—ஒரே தன்மையாம்

621. இது அது என்ற இயலுடை அதுவாய்
எதிர்அற நிறைந்த என் தனி இன்பே

ஒரு பொருள் இத்தன்மையது அத்தன்மையது என்று பாகுபடுத்தி சொல்வதுண்டு. இந்த பாகுபாட்டை இறை அனுபவத்திற்குரியதாக சொல்ல முடியாது ஏனெனில் அதற்கு எதிரான பொருள் உலகத்தில் எங்கும் இல்லை என்று சொல்லும்படி எப்போதும் எங்கும் பரவியிருக்கும் என் ஒப்பற்ற இன்பமே வந்தனம்.

எதிர்அற—எதிர்ப்பதற்கு எதுவும் இல்லாத

622. ஆக்குறும் அவத்தைகள் அனைத்தையும் கடந்து
ஏக்கற நிறைந்த என் தனி இன்பே [மேல்

உண்டாக்குகிற அனுபவங்கள் எல்லாவற்றையும் கடந்து மேன்மேலும் உயர்புல அனுபவங்கள் தந்து கொண்டேயிருக்கும என் ஒப்பற்ற இன்பமே வந்தனம்

ஏக்கற—எதற்கும் ஏங்குவது நீங்கும்படி

Koviloor Digital Library

623\. அறிவிக்கு அறிவினில் அது அது அதுவாய்
எறிவற்று ஓங்கிய என் தனி இன்பே

இறைவனை அறிவறிவு என்பர். அறிவு மூவகைப்படும் (1) தூல உருவ அறிவு, (2) சூட்சும அருஉருவ அறிவு, (3) காரண அருவ அறிவு இம்மூன்றிற்கும் முரண்பாடு ஏற்படாமல் என் உடலும். மனமும், உயிரும் பொருந்தி நிற்கும்படி விளங்கும் என் ஒப்பற்ற இன்பமே வந்தனம்

அது அது அது என மும்முறை குறிப்பதை உருவம் அருஉருவம், அருவம் என மூன்றுவகை இன்பத்தைக் குறிக்கும். எறிவுஅற—ஒதுக்கவே முடியாத

624\. விடயம் எவற்றினும் மேன்மேல் விளைந்தவை
இடை இடை ஓங்கிய என் தனி இன்பே

எல்லாப் பொருள்களிலும் தொடர்ந்து வளர்ந்து வரும் இன்பங்கள் பல. அவை இடை இடையே தடைப் பட்டு நின்று விடாமல் ஓங்கிவளரும் என் ஒப்பற்ற இன்ப அனுபவமே வந்தனம்

625\. இம்மையும் மறுமையும் இயம்பிடும் ஒருமையும்
எம்மையும் நிரம்பிடும் என் தனி இன்பே

இம்மை என்பது உலக அனுபவத்தைக் குறிக்கும். மறுமை இன்பம் உயிர் அனுபவமாகும், இவை இரண்டும் ஒன்றுகிறபோதுதான் எல்லாப் பொருள்களிலும் நிரம்பி நிற்கும் பேரின்பம் தோன்றுகிறது- இவ்வாறு எனக்கு ஒப்பற்ற பேரின்பமாக இருக்கும் இன்பமே வந்தனம்.

எம்மையும்—எந்த நிலையிலும் பொருந்தியிருக்கிற பேரின்பம்

626\. முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள்
எத்திறத்தவர்க்குமாம் என் தனி இன்பே

பேரின்பத்தை முத்தர், சித்தர், சத்தி, சத்தர் என்ற நால்வகையினருக்கும் நான் வழங்கும்படி ஒப்பற்ற நிலையில் வளர்ந்திருக்கும் இன்பமே வந்தனம்

Koviloor Digital Library

நான்குபேர் சொல்லுகிறபடி கேள் என்பது அறிவுரை இதில் குறிப்பிட்ட நால்வர் (1) ஆற்றலுடைய சத்தி (2) ஆற்றலை ஆளுகின்ற சத்தர் (3) அதன் மூலமாக விடுதலை அடைந்த முத்தர் (4) விடுதலையிலிருந்து தக்க பயிற்சியால் அருஞ்செயல் புரியும் சித்தர் என்பவரே. இவர்களை ''புறநடுவொடு கடை'' என்ற 16 பாடல்களில் அறிஞர்—அறவோர்—அந்தணர்—அறிவர் என்று விளங்கிக்கொள்ளலாம் அறிஞர் வெறும் படிப்பாளர்கள் அறிவர்—தீர்க்கதரிசிகள்.

627. எல்லா நிலைகளின் எல்லா உயிர் உறும்
எல்லா இன்புமாம் என் தனி இன்பே

மிக நுண்ணிய எறும்பு முதல் மிகப் பெரிய யானை வரையில் உயிர்கள் பலவகை உண்டு; இவ்வுயிர்கள் யாவும் அடைகின்ற இன்பத்திலும் பலவகை உண்டு. இத்தகை இன்பம் அனைத்தும் வழங்கி அருளும் என்னுடைய ஒப்பற்ற இன்பமே வந்தனம்

உயிர்ப்பணி என்பது எல்லோருக்கும் ஒரே வகையான பணியாற்றுவது என்பதன்று. ஒவ்வொரு உயிருக்கும் ஏற்ற வகையில் தேவையான பண்புரிவது தான் உண்மையான பணியாகும். அவற்றின் கூட்டுத் தொகைதான் பேரின்பமாக பெருகிநின்று நிலைபெறுகிறது. எல்லா நிலை எல்லா உயிர், எல்லா இன்பம் என்று கூறும் மூன்றுமே இறைவனின் மூன்று நிலைகள் தான்.

இன்றைய சன்மார்க்க பணிகளில் அன்னம் பாலித்தல் போன்றவைகளில் நுட்பமான வேறுபாடுகளை கவனிக்கத் தக்கது ஒவ்வொரு இடத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப புள்ளி விவரம் எடுத்து பசித்தவர்க்கு பசிதவிர்த்தல் மாத்திரமே புரிய வேண்டும். புற இனத்தார்க்கு பண்புரைத்தல் நன்புரைத்தல் வேண்டாதவையாகும் என்பது பெருமான் வாக்கு.

Koviloor Digital Library

628. கரும்புறுசாறும் கனிந்த முக்கனியின்
விரும்புறும் இரதமும் மிக்க தீம்பாலும்

கரும்பினுள் பொருந்தியிருக்கும் இனிய சாறும், முக்கனியில் கலந்திருக்கும் விரும்பத்தக்க சுவையும், இவற்றையெல்லாம் கடந்து நின்று இனிக்கின்ற பாலுமாகிய ஆர் அமுதே வந்தனம்,

கோவிலூர் KOVILOOR MADALAYAM

இந்த இன்பச்சுவை சத்தினி பாதத்தில் தோன்றும், உடம்பினுள் ஊறுகின்ற அமுதத்தை குறிக்கிறது 'நற்பஞ்சகம்' என தொடங்கும் பாடலும், 'இன்றுவருமோ' என தொடங்கும் பாடலும் கவனிக்கத்தக்கவை.

629. குணங்கொள் கோற்றேனும் கூட்டி ஒன்றாக்கி
மணங்கொளப் பதம்செய் வகையுற இயற்றிய

நல்ல உயர்ந்த தேனையும் அதனால் உண்டாகும் சுவையை உயர்த்தும் பொருள்களையும் ஒன்றாகச் சேர்த்து தகுந்த மணம் தோன்றும் அளவு சாய்ச்சி எடுக்கும் இயற்கையான ஆர்அமுதே வந்தனம்

630. உணவு எனப்பல்கால் உரைக்கினும் நிகரா
வணம் உறும் இன்ப மயமே அதுவாய்

சிறந்த உணவு என்று பலமுறை சொன்னாலும் ஒப்பாகாத வண்ணம் மிக உயர்ந்த இன்ப வ்ண்ணமாகவே விளங்குகிற ஆரமுதே வந்தனம்

ஒருவர் இன்பத்தை தனித்து அனுபவப்பது வேறு. அந்த இன்பத்தை மற்ற உயிர்களும் சேர்ந்து இன்புறும் படி அனுபவிப்பது வேறு. பசியினால் துடிக்கின்ற உயிர் முன்னிருந்து கொண்டு சுவைத்து உண்ணுகின்ற உயிரை விட கொடிய உயிர் வேறு என்ன இருக்கிறது. இதை 'நிகராவணமுறும்' என்ற தொடர் குறிக்கிறது.

நிகரா—ஒப்பற்ற

Koviloor Digital Library

631. கலந்து அறிவுருவாய்க் கருதுதற்கு அரிதாய்
நலந்தரு விளக்கமும் நவில் அருந்தன்மையும்

எல்லாப் பொருள்களிலும் கலந்திருக்கும் அறிவே இறைவன் உருவாகும் அது அவ்வாறு இருக்கிறது என்று அறிந்து கொள்வதற்கு கடினமானது. இப்படியும் அதை அறிந்து இன்புறும் விளக்கமான ஆற்றலை தந்து, இவ்வாறு இருக்கிறது என்று சொல்லமுடியாத தன்மையுடைய ஆயலபாயுள்ள ஆரமுதே வந்தனம்.

இவ்வியல்பை திருமந்திரம் உரையற்றது ஒன்றை உரை செய்யும் ஊமர்காள் என்கிறது

632. உள்ளதாய் என்றும் உள்ளதாய் என்னுள்
உள்ளதாய் என்றன் உயிர், உளம், உடம்புடன்

எப்போதும் இருப்பதும், என்னுள் இருப்பதும் என் உயிர், மனம், உடல் என்ற மூன்றையும் ஒன்ருக்கி உயர்ந்த உணர்வுடையதாக செய்கின்ற ஆரமுதே வந்தனம்.

இங்கு உயிரைப்போலவே உடம்பும் மனமும் சேதனப் பொருளாக உணர்வுள்ள பொருளாக மாறுவதைக் குறிக்கிறது.

633. எல்லாம் இனிப்ப இயலுறு சுவை அளித்து
எல்லாம் வல்ல சத்து இயற்கையதாகிச்

எல்லாப் பொருள்களும் இன்பம் தரும்படி அமைவது தான் இயற்கையான சுவையாகும், இத்தகைய சுவையை யெல்லாம் எனக்கு கொடுத்து எல்லாம்வல்ல அருஞ்செயல்களை புரிவது எனக்கு இயற்கையாகும்படி அருளிய ஆரமுதே வந்தனம்,

Koviloor Digital Library

திருமணங்கள்

சென்னை 39சாஸ்திரி நகர் அன்னை வேளாங்கண்ணி திருமண கூடத்தில் 25-6-89 ஞாயிறு காலை 8க்கு உலகமையம் சன்மார்க்க சங்க செயலாளர் திரு K.S மணி. அவர்களின் செல்வன் S ஜெயபாலுவிற்கும் திரு பெரியகருப்பன் அவர்களின செல்வி P. கோமதிக்கும் சன்மார்க்க திருமணம் அன்பர்களின் வாழ்த்துரைகளுடன் நடந்தன

சென்னை 38 ICF கம்பர் அரங்கில் 10-7-89 காலை 7 க்கு சன்மார்க்கதொண்டர் திருM. பிரம்மானந்தம அவர்களின் செல்வன்B.தனசேகருக்கும் திரு R.கோபாலன் அவர்களின் செல்வி K. சசிரேகாவிற்கும் திருமணம் நடந்தன. 9-7-89 இரவு 8-க்கு கவிஞர் சுப்பு ஆறுமுகம "வள்ளலார் வந்தார்" வில்லுப்பாட்டு நடத்தினர்.

ஈரோடு கோட்டை செங்குந்தர் திருமணமண்டபத்தில் 9-7-89 காலை 6க்கு திரு. G. சுவாமிநாதன் அவர்களின் செல்வன் S, சிவப்பிரகாசத்திற்கும் திரு சீனிவாசன் அவர் களின் செல்வி T. S. சாந்திக்கும் சன்மார்க்க திருமணம அருட்பா தென்றல் டாக்டர் திரு. M C. இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் நடந்தன.

மதுரை, 624301 சின்னாளபட்டி, கிழக்கோட்டை ச.சு.ச. சன்மார்க்க சங்கத்தில் 16. 17-6-89 வெள்ளி, சனி மாலை 4 மணி முதல் 6 மணி வரை முப்பெரும் விழா நடந்தன, சங்கத்தின் 42ம் ஆண்டுவிழா, மாணவர்களுக்கு குறிப்பேடு வழங்கும் 17ம் ஆண்டுவிழா வடலூா் தருமச் சாலை 123ம ஆண்டுவிழா நடந்தன. 15 பள்ளிகளின 100 மாணவர்கள் பயன்பெற்றனர்.

சன்மார்க்க மணி

சன்மார்க்க வார இதழ் ஆசிரியர் திரு K. S. மணி 1989 செப்டம்பர் முதல் வெளி வருகிறது சன்மார்க்க கருத்துக்களை, செய்திகளை தாங்கி வெளிவருகிறது தொடர்பு கொள்க திரு K S மணி 128 கோல்டன் காம்ப்ளக்ஸ் M K B நகர். சென்னை-39

திருவருட்பா இசைக் கச்சேரிக்கு தொடர்பு கொள்க : இசைவாணர் திரு. S. சின்னமணி 19, பாலீஸ்வரர் கோயில் தெரு, கொழுமணிவாக்கம் மாங்காடு P. O. 602101 செங்கை Dt.

Regd No. T/NMS(N) 427 வள்ளலார் அருளுரை

Koviloor Digital Library

பேராசிரியர் திரு [illegible] எழுதிய

வள்ளலார் விஞ்ஞானம்	விலை ரூ 6-00
வள்ளற்பெருமான் கொள்கையின் பரிணாமம்	விலை ரூ. 1-20
நித்திய வாழ்வு வழங்கும் சுத்த சாதகம்	விலை ரூ. 1-20

பெறுநர்:

அனுப்புதல்:— வள்ளலார் அருளுரை
சிறப்பாசிரியர் சு. கிருஷ்ணமூர்த்தி
21 நிட்டித் தோட்டம் ஐந்தாவது தெரு, பெரம்பூர், சென்னை-600 011.

ஆண்டு சந்தா ரூ. 12-00 நிரந்தர சந்தா ரூ. 120-00

ஆசிரியர், வெளியீட்டாளர் S. இராசன் & அச்சிடுபவர்
திரு M. செல்வராஜ் பரணி அச்சகம் 77 [illegible]
கோ ந. [illegible] சென்னை-12. போன் 664227

Koviloor Digital Library

வள்ளலார் அருளுரை

சன்மார்க்க திங்களிதழ்

ரந்தர ஆசிரியர் | ஆசிரியர்
திருவருட்பிரகாச வள்ளலார் | S. இராசன்

பெருமான் இறைவடிவம் பெற்ற ஆண்டு 116

ருள் 8 | டிசம்பர், ஜனவரி—1991 | உரை 10-11

Acc.no. 5150

Koviloor Digital Library

சம்பந்தமுடையவராகுங்கள்

மனித தேகத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அடைய வேண்டிய ஆன்ம லாபமாகிய முத்திறல் தேகசித்தியாகிய பேரின்ப (நித்திய) பெருவாழ்வை இறைவடிவை 1874ல் வள்ளற்பெருமான் பெற்றார். வள்ளற்பெருமான் சித்திப்பெற்ற சித்திவளாக திருமாளிகை திரு அறையினை தரிசிக்கவும், அவர் ஏற்றி வைத்த சத்திய ஞானதீபத்தை வழிப் பட்டு திருவருள் பெற்றுய்யவும் வருகின்றனர்.

இங்கு சென்னை அன்னதான சாலை என்ற பெயரில் ஒரு பெரிய கட்டிடத் திருப்பணி நடைபெறு கிறது. தினசரி அன்னம் பாலித்தல நடைபெற்று வருகிறது. சென்ற தைப்பூசத்தில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு பசியாற்றுவித்து தங்கவும் வசதி செய்து தந்தோம். இந்த கட்டிடத் தில் உள்ள கல்வெட்டில் ரூ 1000 கொடுப்பவர் கள் பெயர் பொறிக்கப்படுகிறது. அப்பணம் வங்கி யில் நிரந்தர வைப்பு நிதியாக இருக்கும். அதற்கு வருடத்தில் ரூ: 120 வட்டி வரும். அதனைக் கொண்டு ஒருநாள் சாப்பாடு செய்வதற்கு ஒதுக்கப் படும். பிரதிமாதம் ரூ, 10 செலுந்தியோ, அல்லது வருடம் ரூ100 செலுத்தியோ, தானியமாகதந்தோ அன்னதான சாலைக்கு சம்பந்தமுடையவர்களாகுங் கள் என வேண்டுகிறோம்,

தொடர்பு கொள்ள வேண்டிய இடம் :
நிருவாகி, வீர. சண்முகனர்
சென்னை அன்னதான சாலை சித்திவளாகம், மேட்டுக் குப்பம் (P.O,) நெய்வேலி (வழி)607 802 (தெ ஆ)

30-1-91 புதன் காலை 11 மணிக்கு அருட்செல்வர் டாக்டர் நா, மகாலிங்கம் அவர்கள் மேட்டுகுப்பம் சாலை நெய்வேலி சாலை சந்திக்குமிடத்தில் சித்திவளாக திருமாளிகை நுழைவு வாயில் வளைவினை திறந்து வைப் பார்கள்.

Koviloor Digital Library

தெளிவுரை—வடலூர்முத்துஇராமலிங்கம்

38. மன்றூர் நிலையார்

மன்றுஆர் நிலையார் திருவொற்றி வாணர் இவர்
தாம் மௌனமொடு
நின்றூர் இருகை ஒலி இசைத்தார் நிமிர்ந்தார்
தவிசின்நிலை குறைத்தார்
நன்றூர் அமுது சிறிது உமிழ்ந்தார் நடித்தார்
யாவும் ஐயம் என்றேன்
இன்தாமரைக் கை ஏந்துகின்றூர் இதுதான் சேடி
என்னேடீ

மன்று—சிதம்பர பொற்சபை; ஐயம்—சந்தேகம், பிச்சை ஒலி—ஓசை; அமலை₄ சோறுஉமிழ்தல்—துப்பல், துப்பு₀ (சோறு, அமுது); நடித்தல்—சதி (சோறு); தவிசின் நிலை குறைத்தல்—ஆசனம் அசனமாதல், சோறு

பல அம்பலங்களில் நிலைபெற எழுந்தருளியிருக்கும் திருவொற்றி தியாகேசர் என்முன்னே வந்து மௌனமாக நின்றூர். அந்த மௌனத்தை கலைப்பதற்கும், என் கவனத்தை ஈர்ப்பதற்கும் கைதட்டி ஒலி எழுப்பினுர், தாளம் போடுவதையும் குறிக்கிறது, அப்படியே நிமிர்ந்து நின்றூர். ஆசனத்தின் நீளத்தைக் குறைத்தார் நாட்டியம் ஆடினுர். துப்பினுர். இவ்வளவும் எனக்கு ஐயம் என்றேன், நன்ருக என்னை புரிந்து கொண்டிருக்கிருய், என்ற நிலைப் போடு கையை ஏந்துகிருர். இதன் பொருள் என்ன என்ருள் தலைவி.

இறைவன் உயிர்களின் உச்சியாகிய திருச்சிற்றம்பலம் முதல் பொன்னம்பலம் வரையில் பல அம்பலங்களில் நிலையான வாழ்க்கையை உணர்த்தும் நடனம் புரிகிருர். திருஒற்றியூரில் எழுந்தருளியிருப்பவர். என் முன்னே வந்து

Koviloor Digital Library

மௌனமாக நிற்பதோடு இத்தகைய பல செயல்களையும் செய்தார். நீயோ எல்லாம் ஐயம் என்று அவரைப் பார்த்தாய்

நீ நன்ருக அவரை புரிந்து கொண்டிருக்கிருய். அவர் செய்த செயல்கள் எல்லாம் சோற்றையே குறிக்கிறது. ஐயமிடுவதும் அது தானே அன்னம் பாலி என்று கையை ஏந்திஞர் அல்லவா' அதுதான் உன்னிடமிருந்து உன் அறியாமையை அவர் வாங்கிக் கொண்டு மெய்ப்பொருள் அறிவை உனக்கு கொடுப்பதாகும். அவர் நீட்டிய கை உன்னிடம் பிச்சை வாங்குவதற்காக நீட்டிய கை என்று எண்ணி நீ ஏமாந்து போகாதே. உனக்கு பிச்சை போடு வதற்காகவும் நீட்டிய கை என்று புரிந்து கொள். இரப்பதி லும் ஓர் அழகு இருக்கிறது என்பதை புரிந்து கொள் என உள்ளம் விளக்கியது. உயிரும் போதுமான அளவு விளங்கி கொண்டது.

39. ஊரா வைத்தது எது?

வாரா விருந்தாய் வள்ளல் இவர் வந்தார் மௌன
மொடு நின்ருர்
நீர்ஆர் எங்கே இருப்பது என்றேன் நீண்ட சடை
யைக் குறிப்பித்தார்
ஊரா வைத்தது எது என்றேன் ஒண்கை ஓடுஎன்
இடத்தினில் வைத்து
ஏர்ஆர் கரத்தால் சுட்டுகின்ருர் இதுதான் சேடி
என்னேடீ

ஆர்—யார், நிறைந்த, பொருந்தல்

எல்லா உயிர்களுக்கும் அருள்புரிகிற தியாகராசர் இதுவரை வராதிருந்த புதிய விருந்தினராக வந்து மௌன மாக நின்ருர், நீர் எங்கிருக்கிறீர் என கேட்டேன். நீர்—ஆர் எங்கே இருப்பது, என்பதை கங்கை எங்கேயிருக்கிறது என்று கேட்டதாக எண்ணிக் கொண்டு, தன்னுடைய

Koviloor Digital Library

சடையில் இருப்பதாக சுட்டி காட்டினார். தாங்கள் நிலையாக தங்கியிருக்கும் ஊர் எது என்று கேட்டேன். தம்முடைய கையிலிருந்த திருவோட்டை என் பக்கத்தில் வைத்து, ஒதுங்கி நின்று தன் கையால் அதை சுட்டி காட்டினார், இதன் பொருள் என்ன என்று கேட்டாள் தலைவி.

தோழி விளக்கினாள். இதுவரை வராதிருந்த இறைவன் உன்னை அணுகி உன்னிடம் பேசாது நின்றதற்கு காரணம் அவரிடம் நீ போதுமான அளவு ஈடுபாடு கொள்ளவில்லை என்பது தான். நீர் யார்? எங்கே இருப்பது என்பதினை தாங்கள் யார்? கங்கை எங்கே இருக்கிறது என்ற கேள்விகளை கலந்து கேட்டதாக எண்ணிக் கொண்டு கங்கையை சடையில் வைத்திருக்கும் கங்காதரன் என்று சடையை சுட்டிக் காட்டினார்.

தாங்கள் நிலையாக தங்கும் ஊர் யாது என்ற கேள்விக்கு ஒற்றியூர்தான் நான் நிலையாக தங்கும் ஊர் என்பதைத் தெரிவிப்பதற்கு திருவோட்டை உயிர் அருகே வைத்து விலகி நின்று அதைச் சுட்டி காட்டியிருக்கிறார். நீ போதுமான அளவு இறைவரிடம் ஈடுபட்டிருந்தால் நீர் யார் என்றோ, எங்கே இருக்கிறீர் என்றோ கேட்டிருக்க வேண்டாம் அல்லவா!

உன்னுடைய உடம்பிலே உயிருக்கு உயிராக இருக்கும் இறைவனை யார் என்றும், எங்கே இருப்பவர் என்றும், உமக்கு நிலையான ஊர் இல்லையா என்றும் கேட்பது தவறு அல்லவா? இறைவன் உன்னிடத்தில் இருக்கும் இடத்தையும் விளக்க திருவோட்டை கீழே வைத்து அதை சுட்டி காட்டியிருக்கிறார். முள்ளந்தண்டின் உச்சியில் பகர வடிவத்திலுள்ள மானசரோபம் என்ற நீர் நிலை இருக்கிறது. அதன் மேல் நிராதாரமாக ஒளிவீசிக் கொண்டிருக்கிறவர் தான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்பதை புரிந்துகொள் "ஊராக வைத்திருப்பது எது" என்பதற்கு இதுவே பதிலாகும்.

Koviloor Digital Library

உயிரை கண்காணித்துக் கொண்டு இருக்கின்ற இறைவன் இருப்பிடம் மூளையும் முள்ளந் தண்டும் கூடுமிடமாகும், இது உற்று நோக்கினாலே இறைவன் அருள் ஒளி வண்ணமாக இருப்பதைக் காணலாம் என்கிறது அருளி விளக்கமாலை. இறைவனுக்கு நிலையான ஊர் வேறெதுவுமில்லை உடம்பினுள்ளேயே இருக்கிறது என்று உள்ளம் விளக்கியது.

ஓர்கின்ற ஐந்து என்பது என்ன? மெய், வாய் மூக்கு செவி கண் என்ற ஐந்து புலன்களும் மனம் என்ற ஆறுவது அறிவினால் ஓர்ந்து உணரப்படுகின்றன. அதனால் மேலே குறித்த ஐந்து வகை அனுபவங்கள் முதலியவற்றையும் ஐம்புலனோடு ஒப்பிட்டு காண்க.

40. இங்கே நடந்து வருகின்றார்

செங்கேழ் கங்கைச் சடையார் வாய் திறவார்
ஆக ஈண்டு அடைந்தார்
எங்கே இருந்து இங்கு அணைந்ததுகாண் எங்கள்
பெருமான் என்றேன் என்
அங்கு ஏழ் அருகின் அகன்று போய் அங்கே இறைப்
போது அமர்ந்து எழுந்தே
இங்கே நடந்து வருகின்றார் இதுதான் சேடி
என்னேடீ

செங்கேழ்—செந்நிறம்; ஈண்டு—இங்கு; ஏழ் = ஏழடி;
இறைப்போது—சிறிது நேரம்

செக்க சிவந்த சடையில் கங்கையை உடையவர் கங்காதரன். வாய்திறவாது மௌனியாக, என்னிடம் வந்தடைந்தார், தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? தங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றேன். கேட்டவுடனே ஏழடி தூரம் நடந்து சென்றார். அங்கே சிறிது நேரம் தங்கியிருந்து எழுந்து மறுபடியும் நான் இருக்

Koviloor Digital Library

கும் இடத்தை நோக்கி வருகின்றார். இதன் பொருள் என்ன என்ன என்றது உயிர்,

உள்ளம் விளக்கியது. இறைவர் மௌனமாக உன்னிடம் வந்து நின்றது மட்டுமல்லாமல் தலையில் கங்கையோடும் வந்தார். ஈரமான உள்ளத்தோடு உன்னிடம் இரக்கம் காட்ட வந்தவரை எங்கிருந்து வந்தீர்? எதற்காக வந்தீர்! என்ன வேண்டும் என்று நீ கேட்ட கேள்விகளுக்கு அவர் செய்து காட்டிய செயல் என்ன என்று உனக்கு புரிகிறதா? இல்லையா அவரை கேள்வி கேட்காமல் நீ வரவேற்றிருக்க வேண்டும் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. அதை உணர்த்த உன்னிடமிருந்து ஏழடி தூரம் நடந்து சென்றார், விலங்குமுதலிய ஏழுவகை பிறப்பையும் கடந்து நீ உருவாக வேண்டும். மாமனித நிலைக்கு உயர வேண்டும். இதை உணர்த்ததான் ஏழடி தூரம் நடந்து சென்றார். இத்துடன் உடம்பிலுள்ள கோசங்கள் ஏழு அவற்றையும் கடந்து மூலகாரண உடம்பிற்குள் உள்ள இறைவனை அடைய வேண்டும்.

நல்யோக ஞானம் புரிதலின்றி நலிந்து விடாதே என்றார். ஒழுங்கு முறையில் இறைவனை அனுபவிக்கிற தியான வாழ்வு இன்றியமையாதது என்று உணர்த்துகிறார். அப்போதுதான் இறைவனே உன்னை நோக்கி வந்து அருள் பாலிப்பான். இதுதான் இங்கே நடந்து வருகிறார் என்பது "இருந்தறியேன், இருந்தவரை ஏத்திடவும் அறியேன் என்று பெருமான் அனுபவித்து பாடியிருக்கிறார்." உயிருள் யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே உயிர் நலம் பரவுக" என்பதற்கிணங்க தியான வசத்தவராய் இருந்து இறைவன் குடியிருக்கும் உயிர்களிடத்தில் நலம் புரிதல், பரோபகாரச் செயல் புரிதல் வேண்டும், பரோபகார சத்விசாரமே சன்மார்க்க சாதனமாகும். உயிர்களுக்கு இன்பு செய்து திருப்திபடுத்துதலே இறைவழிபாடாகும்.

Koviloor Digital Library

இறைவனுக்கு அடிமையாதல், பிள்ளையாதல், நண்பனுதல், அன்பனுதல் என்பது மற்றவர் வழிபாடு ஆகும். உயிர்களுக்காக அடிமையாதல் பிள்ளையாதல், நண்பனுதல். அன்பனுதலே சுத்த சன்மார்க்க வழிபாடு ஆகும். இதைத் தான் பெருமான் அடிமையாக்கி பிள்ளையாக்கி, நேயனுக்கி அடிகளாக்கி கொண்டாய் அகிலம் நீக்கியே என்று பெருமான் அனுபவித்து பாடியிருக்கிருர் என்று உள்ளம் விளக்கியது

41. ஆர் இதழிமதி

கொடையார் ஒற்றி வாழ்நர் இவர் கூரு மௌனர்
ஆகிநின்ருர்
தொடைஆர் இதழிமதிச் சடை என்துரையே
விழைவு ஏது உமக்கு என்றேன்
உடையார் துன்னல் கந்தைதனை உற்று நோக்கி
நகை செய்தே
இடையாக் கழுமுள் காட்டுகின்ருர் இதுதான்
சேடி என்னேடீ

கொடை=கொடுக்கும் தன்மை; தொடை=மாலை தொடுத்தல்; இதழி=கொன்றைப்பூ; துன்னல் –தைக்கப்பட்ட: இடையாத—தோற்காத, கழுமுள்—சூலம்

திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும் எல்லா உயிர்களுக்கும் நிரம்ப வழங்குபவர், அவர் மிக உயர்ந்த மௌனத்தோடு என் வீட்டு வாயிலில் வந்து நின்ருர். தலையில் பொன் போன்ற கொன்றை மாலையையும் மேலும் மதியையும், மார்பில் ஆத்தி மாலையையும் உடையவராக வந்து நிற்கும் துரையே தங்கள் விருப்பம் என்ன என்று சொல்லுங்கள் என்று கேட்டேன். அவர் தம் இடையிலுள்ள தையல் துணியைப் பார்த்து நகைத்தார். சிறிது நேரத்திற்கு பிறகு கையிலிருந்த சூலத்தை உற்று நோக்கி அதனை சுட்டி காட்டுகிருர். இதன் பொருள் என்ன என்று கேட்டாள் தலைவி,

Koviloor Digital Library

எல்லா உயிர்களுக்கும் வேண்டியதெல்லாம் வழங்கும் துரையாக விளங்குபவர். பாராட்டுதலுக்குரியவர் மௌன விரதம் பூண்டு உன்முன் வந்து நின்ருர். உன்னிடம் எந்தப் பொருளேயும் வேண்டி வரவில்லே. உனக்கு வழங்கவே வந்து நின்ருர் என்பது புரியவில்லேயா நீயோ அவர் அழகைப் பார்த்து சொக்கிப் போய் விட்டாய். அதுவும் உன் இயல்பு தான்: கொன்றை மாலேயும், ஆத்தி மாலேயும் முறையே தூய உடம்பையும், பிரணவ உடம்பையும் உணர்த்துகின்றன அவ்விரண்டும் சேர்ந்தே ஞான உடம்பாக, மதியாக உயர்ந்து நிற்கின்றது.

இவ்வாறு மூன்று உடம்பை ஓர் உடம்பாக உனக்கு வழங்க வந்தவர். தையல் துணியைப் பார்த்து நகைத்தது முறை தானே! அதை நீ உணர்ந்து கொள்ளாமல், அவர் காட்டிய சூலத்தின் பொருளே உணர்ந்து கொள்ளாமல் தவிக்கிருய். அதுவும் மூன்று இலேகளேயுடைய வேல், திரிசூல் வேல் என்பதை மறந்து விடாதே. இதுவும் முத்திறல் வடிவத்தையே குறிக்கின்றன.

முன்குறித்த இதழி ஆர் மதி என்ற மூன்றும் பிரணவ சுத்த ஞான தேகத்தை குறித்தாலும் அவை இறைவனுல் வழங்கப் பெறும் பரிசு. அந்த பரிசுக்கு நீ உன் செயலளவில் ஏதாவது செய்ய வேண்டுமல்லவா? அதைத்தான் தையலே நீ உன் முத்திறல் வடிவத்தைக் கொண்டு உயிர்ப்பணி செய்ய இப்பரிசைப் பெற்று பேரின்ப வாழ்வை பெறுவாயாக என்று வாழ்த்துகிருர். இங்கு சூலப் படையை சுட்டிக் காட்டுவதின் நோக்கம் என்ன? தையல் துணியைப் பார்த்து நகைத்தபிறகு சூலத்தை சுட்டி காட்டுவதின் கருத்து நீ பெண்ணுக இருந்தாலும் உயிர் நலப்பணி செய்யும் திறமையுடையவள். ஆணேவிட பெண்ணிற்கு இத்திறமை மிகுதியாக உண்டு என்று பாராட்டுவது தான் நகைப்பதின் பொருளாகும்.

"சுட்டிக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது'' என்பது முதுரை. சுயமான திறமை எவ்வளவு

Koviloor Digital Library

இருந்தாலும் அதனை நினைவுபடுத்துவது தேவையாயிருக்கிறது, பொன் விளக்கு ஆயினும் தூண்டுகோல் வேண்டுமல்லவா! அதனால் பெண்ணாகிய நீ ஒளி நெறியாகிய ஒப்பற்ற உயிர்நலப்பணி புரிய வேண்டும் என்கிறார்.

42, செய்யாள் இல்நச்சினம்

பொன்னைக் கொடுத்தும் புணர்வரிய புனிதர்
இவர்ஊர் ஒற்றியதாம்
முன்னைத் தவத்தால் யாம் காண முன்னே நின்றார்
முகம் மலர்ந்து
மின்னில் பொலியும்சடையீர் என் வேண்டும்
என்றேனைச் செய்யாள்
இல் நச்சினம் காண் என்கின்றார் இதுதான் சேடி
என்னேடீ

புணர்தல்—அடைதல்; சேர்தற்கு: அரிய—கடினம்,
நச்சினம்—விரும்பினம்: இலக்குமி, தாமரை, வீடு
செய்யாள்—இலக்குமி; உண்—உண்ண.

பொருளை கொடுத்தும் அடைய முடியாத தூயவர். இவருடைய தலம் திருவொற்றியூர் என்கிறார் நான் முன்னே செய்திருக்கும் நல்ல தவத்தால் என் முன்னே வந்து அவர் நின்றார். புன்முறுவலோடு தங்கள் வரவு நல்வரவு என்றேன். மின்னலைப் போல ஒளிவீசும் சடையை உடையவரே என்ன தேவை தங்களுக்கு என்று கேட்டேன். இது தெரியாதா என்றார். ஒரு குடும்ப பெண் தன் வீட்டில் உபசரித்து வழங்கும் உணவை விரும்பி உண்ண வேண்டி வந்தோம் என்கின்றார் இதன் பொருள் என்ன என்றாள் தலைவி.

எந்த பொருளையும் உலகில் அடைவதற்கு ஒரே வழி பொருள்தான என்பர். இங்கே பொருள் என்பது என்ன

Koviloor Digital Library
என் செய்தால் தீரும் என்ற கேள்விக்கு பொன் செய்தால் தீரும் என்ற பதில் கிடைக்கிறது. ஆனால் ஆண்டவனை அடைவதற்கு அதனால் முடியாது நீ உன்னுடைய தவப் பயனால் இறைவனை நேரில் காணும் பேறு பெற்றிருக்கிறாய். அவர் மின்னல்போல் தோன்றி மறைந்து விடுவார், நீ விழிப்போடு இருக்க வேண்டும், உண்பதற்கு உணவு வேண்டி அவர் உன்னிடம் வந்து நிற்கவில்லை, உண்பதற்கு தூய உள்ளமும் உயிர்ப்பணியும் உடையவர் இல்லத்தில் அவர் வேறு எதை விரும்பி வந்திருக்க முடியும்.

உண்பதற்கு செய்யாள் என்ற சொற்றொடர் உணச் செய்யாள் என்று அமைகிறது. உண்ணுவதற்கு மட்டும் சோறு போட்டு அனுப்பி விட மாட்டாள். பாராட்டத் தக்க பணியும் புரிவாள். அதையே நாம் விரும்புகிறோம் என்பதைத் தான் உணச் செய்யாள் இல்நச்சினம் என்கிறார். இல்லத்தை விரும்புவது வேறு; இல்லத்தில் வழங்கப்படும் உணவை விரும்புவது வேறு அல்லவா, எனவே அவர் உன்னையே வாழ்விக்க விரும்புகிறார். நீ வழங்கும் உணவை உண்ண விரும்பவில்லை. அவர் உணவும், உறக்கமும் துறந்தவர் என்பதை புரிந்துகொள்.

43. பிநாகம்

வயல்ஆர் சோலை எழில்ஒற்றி வாணராகும்
இவர் தமை நான்
செயல்ஆர் அடியார்க்கு அருள்வீர் நும்சிரத்தும்
உரத்தும்திகழ் கரத்தும்
வியலாய்க் கொண்டதுஎன் என்றேன் விளங்கும்
பிநாகம் அவை மூன்று
இயலார் காண்டி என்கின்றார் இதுதான் சேடி
என்னேடீ

நீர்வளம் நிலவளம் பொருந்திய திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும் உயிர்ப்பணி செய்கிற அடியவர்

Koviloor Digital Library

களுக்கு அருள் புரிகின்ற தேவரீர் தலையிலும், மார்பிலும், கையிலும் இருப்பவை யாவை என்று கேட்டேன். அவர் அதனை பிநாகம் என்று பதில் சொன்னார். புரியும்படி சொல்ல வேண்டும் என்று வேண்டினேன், அவர் இலக்கணத்தால் புரிந்து கொள் என்று சொல்கிறார். இதன் பொருள் என்னவென்று கேட்டாள் தலைவி.

நீ அவரைப் பார்த்து கேட்ட கேள்விக்கு அவரே ஒரு சொல்லில் பதில் சொல்லியிருக்கிறார் அந்த சொல்லை இலக்கண அடிப்படையில் பிரித்துப்பார் உனக்கு பொருள் விளங்கும் என்று தெரிவித்தார். தலையில் கங்கையையும், மார்பில் நாகத்தையும், கையில் வில்லையும் உடையவர் இறைவர், இதனை பிநாகம் என்ற சொல்லிலுள்ள கம், நாகம், பிநாகம் என்ற மூன்று சொற்களும் உணர்த்துகின்றன. மூன்றும் சேர்ந்து ஒரே சொல்லாக பிநாகமாக விளங்குகிறது. தூய தூல தேகமும் பிரணவ சூட்சும தேகமும் காரண இன்ப ஞான தேகமும் இந்த ஒரே சொல்லில் குறிப்பாக உணர்த்தப்படுவதைப் பார்க்கலாம். தலை ஞானத்தை உணர்த்துகிறது. மார்பு பிரணவத்தை தெரிவிக்கிறது, கை சுத்த தேகத்தை அறிவிக்கிறது. பிநாகம் என்ற சொல்லை பகுத்தும் தொகுத்தும் பார்க்கும் போது தலையில் நீர் (கம்) மார்பில் நாகம், கையில் பிநாகம் (வில்) என்று தெரிந்து கொள்ளலாம்.

44. எது நடுஓர் எழுத்திட்டு அறிநீ
பொது நின்ற அருள்வீர் ஒற்றிஉளீர் பூஉந்தியது
என் விழி என்றேன்
இது என்றுஅறி நாம் ஏறுகின்றது என்றார்
ஏறுகின்றது தான்
எது என்று உரைத்தேன் எதுநடு ஓர் எழுத்திட்டு
அறி நீ என்று சொலி
எதிர்நின்று உவந்து நகைக்கின்றார் இதுதான் சேடி
என்னேடீ

Koviloor Digital Library

பொது=பொற்சபை, உந்தியது—கடந்தது,
எது இடையில் ரு பெற்று எருது ஆகிறது.
கண்ணை, தாமரை மலர் எனல்
உயிர்—சிவன், அறிவு, ஆண்.
உடம்பு—திருமால், பெண், மனம்.

திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானே தாங்கள் பொற்சபையில் நின்று அருள்புரிவீராக கண்ணில் (தாமரை) மலர் அமைந்த முறை என்ன என்று கேட்டேன். நாம் ஏறுகின்ற காளை வாகனம் பத்மநாபன் இதுதான் என்பதை அறிந்து கொள்க என்று என் கேள்விக்கு விடை தந்தார், அப்படி நீங்கள் ஏறுகின்ற வாகனம் தான் என்ன என்று தெளிவாக புரிந்து கொள்ளும்படி சொல் லுங்கள் என்று கேட்டேன். நான் ஏறுகின்ற வாகனம் எது நீ புரிந்து கொள்வதற்கு எது என்ற சொல்லின் நடுவில் 'ரு' என்ற எழுத்திட்டு எருது என்று சொல்லிப்பார், தெரியும் என்று சொல்லிவிட்டு எதிரே நின்று நகைக் கின்றார். இதன் பொருள் என்ன என்று எனக்கு விளங்கும் படி சொல்வாயாக என் உள்ளமே.

உள்ளம் உயிரை பார்த்து உன்னுடைய தலைவரையே நீ புரிந்து கொள்ளாமல் அவருடைய தாமரைக் கண்ணின் பொருளை புரிந்து கொள்ளாமல் தாங்கள் ஏறுவது என்ன என்று கேட்பது நகைக்கத் தக்கது இல்லையா? அதனால் தான் நீ உடையவரையே அறிந்து கொள்ளாதவள் என்று உன் தலைவர் உன்னை பார்த்து நகைக்கின்றார் என்று உள்ளம் விளக்கியது. எது நீங்கள் ஏறுவது என்ற கேள்விக்கு விடையாக முதல் சொல்லின் இடையில் ரு என்பதையிட்டு நாம் ஏறுவது எருது என்று தெளிவான விடையை தெரிவித்தார் உடையவர்,

உடம்பை திருமால் என்றும், உயிரை உருத்திரன் என்றும் கொள்வது மரபு. உயிர் ஏறுவதற்கு வாகனமாக

Koviloor Digital Library

அமைவது தானே உடம்பு! எனவே பத்மநாபன் திருமால் சிவபெருமான் வாகனம் என்ற பௌராணிகவிளக்கமும் இங்குள்ளது. அத்துடன் உயிரையும் உடம்பையும் முறையே ஆண் என்றும் பெண் என்றும் திருஅகவல் தெரிவிக்கிறது அறிவை ஆண் என்றும், மனதை (அன்பு) பெண் என்றும் குறிப்பது மற்ருெரு விளக்கம். இவ்வாறே ஆண் பெண் விளக்கங்களாக உடம்பையும் உயிரையும் ஒப்பிட்டுப் பாடும் பாடல்களாக திரு அகவலில் இருக்கின்றன

45. சுட்டும் சுதனே

இட்டம் களித்தது ஒற்றிஉளீர் ஈண்டு இவ்வேளை
எவன் என்றேன்
சுட்டும் சுதனே என்ருர் நான் சுட்டி அறியச்
சொ்லும் என்றேன்
பட்டு உள்மருங்குல் பாவாய் நீ பரித்தது அன்றே
பார் என்றே
எட்டும் களிப்பால் உரைக்கின்ருர் இதுதான் சேடிக்
என்னேடீ

சுட்டுதல்—குறிக்கத்தக்கது: தியானம் செய்தல்,
இட்டம்—விருப்பம், எவன்—எதை குறித்தது
வேளை—முருகன், சமயம் பொழுது,' சுதன்—மகன், முருகன்
பட்டுண்ட—பட்டுப் புடவை சூழ்ந்த, மருங்குல்—இருப்பு, சாமி—பொன், பாவை—பதிமை பொம்மை, பரித்தது—தாங்கியது, —பட்டும்—மிகுதியாக

விருப்பத்தை நிறைவேற்றுவதால் இன்பத்தை அளிக்கும் திருஒற்றியூரில் இருப்பவரே. இங்கு இப்போது நீங்கள் எண்ணியது என்ன என்று கேட்டேன். சுட்டிக் காட்டுகின்ற மகனே என்று பதில் சொன்ஞர். நான் வெளிப்படையாக தெரிந்து கொள்ளும்படி சொல்லுங்கள் என்றேன். பட்டுடையை உடுத்தியிருக்கும் இடையினையுடைய பெண்ணே நீ அடைந்தது இதுதான் என்று

Koviloor Digital Library

சொல்லுகிறார். எட்டுகின்ற மகிழ்ச்சியில் எடுத்து சொல்லுகின்றார். இதன் பொருள் என்ன" உள்ளத்தை கேட்டாள்.

உடம்பின் தோற்றம் புறத்தே உள்ள பொருள்களோடு தொடர்புடையது. வெள் ஒளியாய் ஆனது. ஆனால் அதன் உள்ளேயும் வெளியேயும் ஒருங்கே அமைந்திருக்கும் உயிர் ஒளியாகிய உள் உடம்பு அழியாத அழகுடைய முருகனையே குறிக்கிறது. முருகு என்ற சொல்லுக்கு இளமை அழகு என்றும் அழியாத தெய்வ தன்மை என்ற பொருள்கள் உண்டு. புறத்தே இருக்கும் போலி கவர்ச்சிகளை எல்லாம் விட்டவுடனே நுண் உடம்பாகிய உயிர் ஒளி (மனம்) ஓங்குகிறது. அது ஓங்கியஉடனே உள்ஒளியாகிய இறைமை, தெய்வத்தன்மை தெளிவாக வெளிப்படுகிறது.

உயிர் ஒளி உள்ஒளியின் பிள்ளையே. உள்ஒளி ஓங்கிட உயிர்ஒளி விளங்கிட வெள்ஒளி காட்டிய மெய் அருள் கனலே என்கிறது திருஅகவல். இவ்வாறு சுட்டி அறிகிற உயிர் ஒளியாகிய முருகனை உடையவர்தான் பெருவாழ்வாகிய நித்திய வாழ்வை பெறுகிறார். இதனையே சுட்டும் சுதன் என்று குறித்துக் காட்டக் கூடிய மகன். அழகும் இளமையும் பொருந்திய பொன் வடிவ சாமிநாதன் என்று தத்துவம் விளக்குகிறது. தத்துவம் என்ற சொல்லுக்கு ஆற்றலின் வெளிப்பாடு என்றும் உடலின் பகுதி என்றும் பொருள் உண்டு. இதனை வடமொழியின் அடிப்படையில் (தத்+துவம்) என பிரித்து அது நீ, கடவுளே நீ என்று சொல்லுவது மகாவாக்கியங்கள் நான்கில் ஒன்று. "தத்துவம் அசி" என்று சொல்லுவார்கள் அசி என்றால், இரு என்ற பொருள் தரும் கடவுள் நீ ஆகும்படி வாழ்க என்பது தான் முழு பொருளாகும்.

Koviloor Digital Library

46. சொல்லுக்கு இளையேம்

பாற்றகணத்தார் இவர் காட்டுப்பள்ளித்தலைவர்
ஒற்றியினின்று
ஆற்றப் பசித்து வந்தாராம் அன்னம் இடுமின்
என்று உரைத்தேன்
சோற்றுக்கு இளைத்தோம் ஆயினும் யாம்
சொல்லுக்கு இளையேம் கீழ்ப்பள்ளி
ஏற்றுக் கிடந்தாய் என்கின்றார் இதுதான் சேடி
என்னோடீ

பாற்று—அழிக்கும். கணத்தார்—பூதக்கூட்டம், திருக்காட்டு பள்ளி—காடு, பள்ளி சாதி தலைவர், ஆற்ற—மிகவும்,

படிப்படியாக ஐம்பூதங்களின் தடித்தவற்றை நீக்கு ஒளிமயமாக வாழ வைப்பவர் இவர் என்று சொன்னேன். திருஒற்றியூரிலிருந்து வந்திருக்கிறார், மிகப் பசிக்கிறது என்று சொல்லுகிறார். 'வீட்டிலுள்ளவர்களாகிய பாங்கி மாரிடம் அவருடைய பசி தீரும்படி அன்னமிடுங்கள் என்று கட்டளையிட்டேன். இதை கேட்ட உடனே இறைவன் பசியிருப்பதால் சோற்றுக்கு இளைத்தோம் என்பது உண்மைதான். ஆனால் உன் சொல்லுக்கு இளைத்தோம் என்று எண்ணி விடாதே. நீ உயர்ந்தவள் என்று எண்ண இடந்தராமல் தாழ்ந்தவளாகவே நடந்து கொள்கிறாய். நீயே அன்னமிடுவதற்கு பதிலாக ஆணவதடிப்பால் பாங்கிமாரை அன்னமிடச் சொல்லி அழைக்கிறாய் .தானே அன்னமிடாமல் பாங்கிமாரிடம் அன்னமிடும்படி கட்டளையிட்டது. ஆணவத்தால் தாழ்ந்த நிலையை காட்டுகிறது. இது திருக்காட்டுப் பள்ளியின் மேல்நிலை என்ற சூழ்நிலையே என்பதை புரிந்து கொள்க என்று உள்ளம் விளக்கிற்று.

Koviloor Digital Library

துரிய மொழி

(வ.மு ரா.)

நமது அனுபவங்கள் 1. தூக்கம், 2, கனவு, 3. நனவு 4. துரியம், 5. துரியாதீதம் என ஐந்து வகைப்படும். நான்காவது அனுபவமே துரியம் ஆகும் துரியம் என்ற சொல்லுக்கே நான்கு என்ற பொருளும் உண்டு. முதல் அனுபவமாகிய தூக்கம் என்பது மிகமிக குறைந்த உணர்வையே உடையது. தூக்கம் விரிவடைந்தே கனவா கிறது. கனவு விரிவடைந்து நனவு ஆகிறது. பல வகை யான குறைபாடுடைய நனவு அனுபவம் விரிவடைந்து நிலையான அறிவைப் பெறுகிற துரியம் ஆகிறது. நிலையான அறிவு விரிவடைந்து பரிபூரண இன்ப அனுபவ மாக மாறுகிற போது துரிய அதீதம் ஆகிறது.

இவற்றுள் முதல் மூன்று அனுபவங்களும் குறைபாடுகள் உடையவை. அதனுல் முதல் மூன்று அனுபவங்களை மட்டும் உடையவர்கள் பிறப்பதும் இறப்பதுமாக சுழன்று கொண்டிருக்கிருர்கள். 4வது துரியம், 5வது துரியாதீதம் என்ற இரண்டு அனுபவங்களையும் போதுமான அளவு உடையவர்களே மரணமிலா பெருவாழ்வை அடைய முடியும். இத்தகைய பெருவாழ்வைப் பெற்று நம்மை வளர்த்துக் கொண்டிருப்பவர் திருவருட் பிரகாசவள்ளலார்

அவர் வாக்கின்படி துரியம் என்பது நம் உடம்பிற்கும் மனதிற்கும் அப்பாற்பட்டது. இதைத்தான் திரு அகவல் தனுகரண ஆதிகள் தாம் கடந்து அறியும் ஓர் அனுபவ மாகிய அருட்பெருஞ்ஜோதி என்கிறது. மனதாலும் உடலாலும் அறிந்துக் கொள்ள முடியாத நிலையான அறிவை பெறுகிற அனுபவம் தான் துரிய அனுபவமாகும். இந்த விரிவான அறிவு அனுபவமே பரிபூரண இன்ப அனுபவபாக மாறுகிற போது துரியாதீதம் என்று வழங் கப்படுகிறது: ஆதலின் நம்முடைய ஐந்து வகையான அனுபவங்களில் அழியும் தன்மையுடையவை முதல் மூன்று

Koviloor Digital Library

அனுபவங்கள். அழியா தன்மையுடையவை அடுத்த இரண்டு அனுபவங்களாகிற துரியம் துரியாதீதம் என்பன இதனால் தான் ஐந்துக்கு இரண்டு பழுதில்லை என்ற பழமொழி தோன்றி வழங்குகிறது.

இதுபற்றி நம் வள்ளற்பெருமான் முதல் கன்னி சொற்பொழிவில் ''உலகமே உணர்ந்து ஓதற்கு அரியவன்'' என்ற திருத்தொண்டர் புராணத்தின் முதற் செய்யுளின் முதலடியை விளக்கும் போது பிரித்து விளக்கியிருக்கிறார். மிக நீண்ட நேரம் அன்பர்கள் சிறிதும் சலிப்படையாமல் முதலடி விளக்கத்தை கேட்டு இன்புற்றார்கள் என்று வரலாறு தெரிவிக்கிறது, அது மட்டுமல்லாமல் அவரது தலைவனார் சொற்பொழிவு செய்வதற்கு பதிலாக வள்ளலாரே தொடர்ந்து சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்று வேண்டி கேட்டிருக்கிறார்கள்.

இந்த கன்னி சொற்பொழிவு அறிவு உலகத்திலேயே மிக பெரிய புரட்சியை உண்டாக்கி இருக்கிறது. வள்ளலார் வாழ்க்கையிலும் பெரிய மாற்றத்தை மலரச் செய்திருக்கிறது. வள்ளற் பெருமான் உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் என்ற சொற்றொடர்க்கு விளக்கம் தந்தபோது துரிய மொழியை விளக்கி கூறியிருக்கிறார். மொழியின் பெருமையை மொழி நூலின் அடிப்படையில் உணர்ந்து கொள்வதோடு, பெருமானுடைய விளக்கத்தைக் கொண்டு மிகுதியாக உணர வேண்டும்.

மொழி என்பது உண்மையை உணர்த்தும் சொல்லாட்சி மொழியை ஏழு படிகளாகப் பிரித்து ஒவ்வொரு படியும் முன்படியைவிட அதிக உண்மையை உணர்த்துகிறது என்று விளக்கியிருக்கிறார். இந்த ஏழு மொழி பகுதிகளில் முதல் மூன்று பகுதிகள் ஆகங்கார மொழி பகுதிகள். அடுத்த நான்கு பகுதிகள் ஓங்கார மொழி பகுதிகளாகும். ஏழாவது மொழிப்படி தான் துரிய மொழிப் படியாகும்.

Koviloor Digital Library

சென்னை-1, போர்த்துகீசு சர்ச் தெரு, 133 எண்ணில் அனைத்துலக தெய்வத் தமிழ் முதல் மாநாட்டு அலுவலகம் 19-1-1991 சனி, காலை 7க்கு திறக்கப்படும். சென்னையில 1992 பிப்ரவரி கடைசி வாரத்தில் திருக்குறள், திருவருட்பா, சைவம், வைணவம், தமிழிசை, மகளிர் மாநாடுகள் ஆறு நாட்கள் நடைபெறும். 7ம் நாள் தெய்வத்தமிழ்-கல்வி-கலை-பண்பாடு பேரணி புறப்படும். கடித மூலமோ நேரிலோ தொடர்பு கொண்டு ஒத்துழைக்க வாரீர் என இம்மாநாட்டு குழு கேட்டுக்கொள்கிறது.

தெ.ஆ. வடலூர் ஞான சபைவீதி 53லுள்ள ச.சு.ச. சன்மார்க்க பிரச்சார நிலைய சார்பில் 1—1—91 செவ்வாய் காலை 8 மணிக்கு ச சு.ச. சத்திய திருநாள் 5ம் ஆண்டு அருட் பயணம் சன்மார்க்க சான்றோர்கள் வாழ்த்துடன் தொடங்கி மேட்டுக்குப்பம் சித்திவளாக திருமாளிகையை அடைந்தன.

ஆந்திர மாநிலம் சித்தூர் வன்னியகுல க்ஷத்திரிய சங்க கல்யாண மண்டபத்தில் சித்தூர் ச சு.ச. சன்மார்க்க சங்கத்தின் ஆண்டுவிழா 30—12—90 ஞாயிறு காலை 6 முதல் மாலை 6 வரை நடந்தன. திருவருட்பா பாராயணத்துடன் வீதி உலா திருவருட்பா இன்னிசை, சொற்பொழிவு நடந்தன.

வ ஆ. திருத்தணிகை மா.பொ. சிவஞானம் சாலை 361 எண்ணில் 30—12—90 ஞாயிறு மாலை 6 முதல் 1—1—91 செவ்வாய் காலை 4 வரை 37ம் ஆண்டு திருத்தணிகை திருப்படி விழாவினை தென் இரயில்வே அச்சக திருப்பணிகுழு சன்மார்க்க அன்பர்கள் கொண்டாடினர். திருஅகவற் பாராயணத்துடன் திருப்படி ஏறல், திருவருட்பா இன்னிசை, சன்மார்க்க சொற்பொழிவு. தெய்வீக நாடகம் நடந்தன.

சென்னை-78 K.K. நகர் 40வது தெரு, 8வது செக்டார், 313A-ல் 25—12—90 செவ்வாய் காலை 6 முதல் மாலை 6 வரை பெருமான் வருகையுற்ற திருவிழாவும், சிவதட்சிணா மூர்த்தி ஞானம்பாள தம்பதிகள் மணிவிழாவும் நடந்தன.

சென்னை-26 வடபழனி கருணீகர் தெரு 6ல் தமிழ்நாடு இராமலிங்கா மிஷன் நிறுவனர் திருநாவுக்கரசு நினைவுநாள் விழா 25—11—90 ஞாயிறு காலை 9க்கு கொண்டாடப்பட்டது.

சென்னை-21 சிங்காரத்தோட்டம் சேணியம்மன் ஆலயத்தில் 23—12—90 ஞாயிறு காலை 6 முதல் பகல் 1 மணிவரை அருட்ஜோதி ஆலயத்தின் 3ம் ஆண்டு விழா நடந்தன.

சென்னை-71 காமராசர் மெயின்ரோடு சன்மார்க்க சங்கத்தில் நடமாடும் திருவருட்பா வகுப்பு சபை 15ம் ஆண்டு விழா, தைப்பூச விழா 10-2-91 காலை 5 முதல் இரவு 10வரை நடந்தன

Koviloor Digital Library

Regd No. T/MS(N) 427 வள்ளலார் அருள்நெறி

பேராசிரியர் திரு. வடலூர் முத்துராமலிங்கம் எழுதிய

வள்ளலார் விஞ்ஞானம்	விலை ரூ. 6-00
வள்ளற்பெருமான் கொள்கையின் பரிணாமம்	விலை ரூ. 1-20
நித்திய வாழ்வு வழங்கும் சுத்த சாதகம்	விலை ரூ. 1-20
இறை அனுபவ பயிற்சி	விலை ரூ. 1-20

பெறுநர்:

அனுப்புதல்:— வள்ளலார் அருளுரை

சிறப்பாசிரியர் க. கிருஷ்ணமூர்த்தி

21, நீட்டித் தோட்டம் முதலாவது தெரு, பெரம்பூர், சென்னை-600 011.

ஆண்டு சந்தா ரூ. 12-00 நிரந்தர சந்தா ரூ. 120-00

ஆசிரியர், வெளியிடுபவர் S. இராசன் & அச்சிடுபவர்
M. செல்வராசு பரணி அச்சகம் 77 வெங்கட்டாசலம் தெரு
குயப்பேட்டை, சென்னை-12. போன் 664227

Koviloor Digital Library

வள்ளலார் அருளுரை

சன்மார்க்க திங்களிதழ்

நிரந்தர ஆசிரியர் ஆசிரியர் 18
திருவருட்பிரகாச வள்ளலார் S. இராசன்

பெருமான் இறைவடிவம் பெற்ற ஆண்டு 116

அருள் 8 | பிப்ரவரி, மார்ச்—1990 | உரை 12-1

கோவிலூர் ஆண்டவர்
A. No. 5150
R65(வள்)
நூலகம், கோவிலூர்

Koviloor Digital Library

தைப்பூச ஜோதி தரிசனம் காணுதல்

10ம் ஆண்டு பாதயாத்திரையும், மலர் வெளியீடும்,

27—1—90 சனி காலை 6 முதல் மாலை 6 மணி வரை 10ம் ஆண்டு பாதயாத்திரை சிறப்பு மலர் வெளியீட்டு விழா இடம் சமரச சுத்த சன்மார்க்க சத்தியசங்கம் 33 இளங்கோ நகர் விருக்கம்பாக்கம், சென்னை 92 (28—1—90 ஞாயிறு காலை 8 மணிக்கு புறப்படும் இடம். சமரச சுத்த சன்மார்க்க சத்தியசங்கம், விஜய விக்கினேஸ்வரர் கோயில் தெரு. தேனாம்பேட்டை சென்னை-82, 8—2—90 வியாழன் காலை 6 மணிக்கு வடலூரில் ஜோதி தரிசனம்.

1990 ஜனவரி, பிப்ரவரி		காலை மதியம் இரவு
28	ஞாயிறு	தேனாம்பேட்டை-மீனம்பாக்கம்-தாம்பரம்
29	திங்கள்	தாம்பரம் - கூடுவாஞ்சேரி - சிங்க பெருமாள்கோயில்
30	செவ்வாய்	செட்டிபுண்ணியம்-வெண்பாக்கம்-ஜானகி புரம்
31	புதன்	ஜானகிபுரம்-கருங்குழி-அச்சிறுபாக்கம்
1	வியாழன்	அச்சிறுபாக்கம்-தொழுப்பேடு-கரிக்கம்பட்டு
2	வெள்ளி	ஓலக்கூர் - சாரம் -திண்டிவனம்
3	சனி	திண்டிவனம்- கூட்டேரிபட்டு- V.சாலை
4	ஞாயிறு	V சாலை - பாப்பனம்பட்டு - விழுப்புரம்
5	திங்கள்	குச்சிப்பாளையம் - வாணியம்பாளையம்- கண்டரக்கோட்டை
6	செவ்வாய்	கண்டரக்கோட்டை- பண்ருட்டி-காடாம் புலியூர்
7	புதன்	பாவைக்குளம் – வடகுத்து – வடலூர்.

மணிவிழா

திண்டுக்கல், மதுரைரோடு, சாத்தாங்குடி நாடார் உறவின் முறை மீட்டிங்ஹாலில் 14, 15—1—90 இரண்டு நாட்களும் சன்மார்க்க புரவலர் திரு. S. S. கிருஷ்ண மூர்த்தி ஐயா அவர்களுக்கு மணிவிழா நடந்தன ஞாயிறு மாலை 4 முதல் 10 வரை திருவருட்பா இன்னிசையும்சிறப்பு சொற்பொழிவும் நடந்தன. திங்கள் காலை 6 முதல்மாலை 8 வரை திருஅகவற்பாராயணம், திரு அகவல் வெளியீடு ஆதரவற்றவர்களுக்கு அன்னதானம், ஆடைதானம்,ஊன முள்ளவர்களுக்கு உபகாரக்கருவிகளும் வழங்கினர். பாராட்டுரைகள் நிகழ்ந்தன.

Koviloor Digital Library

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

48, வள்ளலார் தெரு, திருவலிதாயம்,
பாடி, சென்னை-50.

திரைபடாத செழுங்கடலே சற்றும்
உரைபடாமல் ஒளிசெய் பொன்னே புகழ்
வரைபடாது வளர் வல்லிகேச நீ
தரைபடாக் கந்தை சாத்தியதென்கோலோ
(பதிகம்-திருவலிதாயம்) திருவருட்பா

இறைவழிபாட்டு மண்டபம் அடிக்கல்நாட்டுவிழா தைப்பூச பெருவிழா, சங்கத்தின் 11ம் ஆண்டு மலர் வெளியீட்டு விழா

விழா நடைப்பெறும் இடம் : திருவலிதாயர் ஆலயம் எதிர்ப்புறம் பாடி சென்னை-50,

நாள் : (வள்ளலார் ஆண்டு 167) 11-3-90 ஞாயிறு காலை 5 முதல் மாலை 9 மணி வரை.

சென்னைபாடி, திருவலிதாயநாத ஆலயத்தின்முன்னே சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க இறைவழிபாட்டு மண்டபம் நிறுவ ஏற்பாடாகியுள்ளது. 11—3—90 ஞாயிறு அருட் செல்வர், சன்மார்க்க செம்மல் டாக்டர் நா, மகாலிங்கம் B.sc FIE அவர்கள் தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நடக்கிறது. திரு. த. பாண்டியன் MA.BL, M.P. அவர்களும் திரு K. R. வரதராஜன் B.com., LLP, MLA அவர்களும், ஆன்மீகத் தலைவர்களும், சன்மார்க்க பேரறிஞர்களும் கலந்து சிறப்பிக்கின்றனர். திருப்பணி செம்மல் திரு வீர சண்முகனுருக்கு பாராட்டு விழா நடக்கிறது. மலர் வெளியிடப்படுகிறது. திரு அகவல் பாராயணம், திருவீதி உலா, திருவருட்பா இன்னிசை சன்மார்க்க சொற்பொழிவு நடைபெறும்.

ஆலயத்தின் முகப்பு வாயிலில் 11 ஆண்டு காலமாக தினசரி மாலை இறைவழிபாடும், வாரந்தோறும் வெள்ளி கிழமை சத்விசாரத்தோடு பிரசாத வினியோகமும், மாதந்தோறும் முதல் வாரத்தில் அன்னதானத்தோடு வழிபாடும், பௌர்ணமியில் மாதர் விளக்கு பூஜையும் அன்னதானமும்

Koviloor Digital Library

ஆண்டுதோறும் தைப்பூசவிழா, வருவிக்கவுற்ற தினவிழா சத்திய தருமச்சாலை விழா நடைபெறுகிறது. மேலும் தினமும் கஞ்சி வார்த்தல், நூல்நிலையம் அமைத்தல், இலவச சிகிச்சை செய்தல், மாணவர்களுக்கு பாட்டு, பேச்சு போட்டி நடத்தல் செய்ய முயற்சிக்கிறோம்.

உலகம் தழைக்க அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரால் இவ்வுலகிற்கு 1823 அக்டோபர் 5ல் திருவருட்பிரகாச வள்ளற்பெருமான் வருவிக்கவுற்றார். நாமெல்லாம்உய்யும் பொருட்டு வடலூரில் தெய்வநிலையங்களை நிறுவி பெருமான் இயக்கிக் கொண்டிருக்கிறார். பெருமான் புனித பாதம் பட்ட இடம் பாடி திருவலிதாயநாதர் ஆலயமாகும் ஐந்தாம் திருமுறையில் திருவலிதாயம் என்ற பதிகத்தில் பத்து பாடல்களை பெருமான் பாடிப் பெருமைப்பெற்ற புனிதஸ்தலமாகும். இறைவழி பாட்டு மண்டபத்தின் திருப்பணி சில இலட்சகணக்கான ரூபாயில் தொடங்க இருப்பதால் தாராளமாக பொருளுதவி செய்ய வேண்டிக் கொள்கிறோம். (வருமான வரிவிலக்கு உண்டு) கட்டிடத்திற்கு தேவையான சிமெண்ட் போன்ற பொருள்கள், மின்சார பொருள்கள், உணவுப்பொருள்கள், நூல்கள் போன்றவை தந்துதவலாம். ஆயிரம் ரூபாய்க்கு மேல் அளிக்கும் தம்பதிகளின் உருவப்படம் மலரில் வெளியிடப்படும் கல்வெட்டில் பொறிக்கப்படும் ரூபாய் நூறு அளிப்பவர்கள் தம்பதிகள் பெயர் மலரில் வெளியிடப்படும். மேற்கண்ட முகவரிக்கு பணம், செக் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அன்பர்கள் இவ்விழாவிற்கு குடும்பத்தோடுவந்திருந்து ஒத்துழைத்து நல்ஆசியை அளிக்க வேண்டுகிறோம்.

தலைவர்	பதிவு எண்	செயலாளர்
திரு. ஆ திருநாவுக்கரசு	314/89	இறையடியார் V. நடராசன்

Koviloor Digital Library

பெருமான் ஞானநிறைவு (இறை வடிவம்) பெற்ற விழா (தைப்பூசம்)

சென்னை-39 வியாசர்பாடி மூர்த்திங்கர் தெரு, இரவீஸ்வரர் ஆலயத்தில் 25-3-90 காலை 6 முதல் மாலை 6 வரை தைப்பூசவிழா 5ம் ஆண்டு நிறைவுவிழா கொண்டாடப்படும். 24-3-90 சனி மாலை 3லிருந்து இரவு 9 வரை E.H. ரோடில் உள்ள முருகர் ஆலயத்தில் திருவருட்பா இன்னிசை, சொற்பொழிவு நடக்கும்.

செங்கை, கவரப்பேட்டை GNT ரோடில் ச. சு. ச. சன்மார்க்க சங்கத்தின் 26ம் ஆண்டு விழா. தைப்பூசவிழா 25—2—90 ஞாயிறு காலை 6 முதல் இரவு 10 வரை நடந்தன. திரு அகவற்பாராயணம், சொற்பொழிவு, பட்டி மன்றம், திருவருட்பா, இன்னிசை, வில்லுபாட்டு, (வடலூர் இளைஞர்) நடந்தன.

சென்னை 5 கிருஷ்ணம்பேட்டை அவ்வை சண்முகம் சாலை வள்ளலார் குடியிருப்பு புதுத்தெரு1ல் 25-2-90 காலை 7 முதல் 10 வரை சங்கத்தின் 32ம் ஆண்டு விழா நடந்தன, இரவு அகவற்பாராயணம், சொற்பொழிவு, இன்னிசை பெருமான் உருவப்படவீதிஉலா; 7 திரை நீக்கி ஜோதி தரிசனம், வில்லுப்பாட்டு (கும்பகோணம் அன்பர்) நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சென்னை 15 சைதை சேஷாஜல முதலி தெரு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் 8 முதல் 11—2—90 வரை 4 நாட்கள் விழா நடத்தினர். மகாமந்திர லட்சார்ச்சனை, சொற்பொழிவு, பெருமான் உருவம் திருவீதிஉலா இன்னிசை நிகழ்ச்சிகள் நடந்தன.

வடலூருக்கு அடுத்த சித்திவளாகத்தில் உள்ளமாயூரம் சன்மார்க்க சங்கத்தின் 62ம் ஆண்டு விழாவும் 8,9,10-2-90 மூன்று நாட்கள் நடந்தன. இன்னிசை, சொற்பொழிவு வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நடந்தன.

Kovilloor Digital Library

தெ.ஆ கள்ளக்குறிச்சி கமலா நேரு தெரு 38ல் திரு. கு. வெள்ளையன் 4—1—90 காலை 6 மணிக்கு இயற்கை எய்தினார். 19—1—90ல் அவர் நினைவாக ஜோதி வழிபாடு நடந்தன. வடலூரில் வள்ளலார் மன்றத்தை நிறுவி தைப்பூசந்தோறும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு பசியாற்றுதலை செய்பவர்.

சென்னை 93 சாலிகிராமம் வடபழனி இராமலிங்காமிஷன் நடுநிலைப்பள்ளியில் 25—3—90 காலை 9 மணி முதல் மாலை 6 வரை சன்மார்க்க ஆன்மீக வளர்ச்சி மாநாட்டினை சிட்கோ நகர் திரு A K பாலசுப்பிரமணியம் அவர்கள் நடத்துகிறார் மரணமிலா பெருவாழ்வு பற்றி சத்விசாரம், தியான யோகபயிற்சி நடைபெறும். ரூபாய் பத்து செலுத்தி இம்மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டுகிறார்.

பிரதிமாதம் பௌர்ணமி அன்று மாலை 6க்கு வடலூரில் சத்தியத்தருமச்சாலைக்கருகிலுள்ள திருவாரூர் சத்திரத்தில் சுமார் இருநூறு பேர்களுக்கு அன்னதானம் சென்னை துறைமுக அலுவலக வள்ளலார் நற்பணி மன்றத்தின் மூலம் 1986 அக்டோபர் முதல் நடைபெறுகிறது.

சென்னை 602101 கொழுமணிவாக்கம் மாங்காடு பிள்ளையார்கோயில் மேலண்டை வீதியிலுள்ள ச. சு. ச சன்மார்க்க சங்க கட்டட திருப்பணிக்கு அன்பர்கள் பொருளுதவி அளிக்கவேண்டுகிறோம். பிரதி ஞாயிறு காலை 11க்கு சன் மார்க்க வழிபாடு 1987 முதல் நடைபெறுகிறது,

அன்பன் திரு வடிவேலு முதலியார்

சென்னை 20 கருணைமிகு திரு S P வீராசாமி அவர்கள் அறக்கட்டளையின்படி பிரதி பூசந்தோறும் வடலூர் சாவித்திரி அம்மையார் நிலையத்திலும் பிரதி பௌர்ணமி தோறும் (1) விழுப்புரம் இந்திரா நகர் 4-109லுள்ள திரு மா கோவிந்தசாமி இல்லத்திலும் (2) சென்னை 41 திருவான்மியூர் வடக்கு மாடவீதி 18ல் திரு, சோ மோகன் இல்லத்திலும் அன்னதானம் நடைபெறுகிறது. பிரதி ஞாயிறு காலை சத்விசாரம் திரு கோ மோகன் நடத்துகிறார் பிரதி ஞாயிறு மாலை விழுப்புரம் திரு வி க வீதி நந்தவனம் ஞான சபையில் திருவருட்பா தொடர் சொற்பொழிவினை திரு மா கோவிந்தசாமி நடத்துகிறார்

Koviloor Digital Library

திருவருட்பெருஞ்ஜோதி அகவல் தெளிவுரை (18)

வ.மு.ரா.

686 இதமுற ஊழிதோறு எடுத்தெடுத்து உலகோர்க்கு
உதவினும் உலவாது ஓங்கு நல்நிதியே

தேவையுள்ளவர்களுக்கெல்லாம் இன்பம் உண்டாகும்படி பல ஊழிகாலந்தோறும் தொடர்ந்து கொடுத்து உதவினாலும் சிறிதும் குறையாமல் வளர்ந்து கொண்டே இருக்கும நன்மையான செல்வமே வந்தனம்.

687 இருநிதி எழுநிதி இயல் நவநிதி முதல்
திருநிதி எல்லாம் தரும் ஒரு நிதியே

இருவகை செல்வமும், எழுவகை செல்வமும் ஒன்பது வகை செல்வத்துடன் திருநிதியும் கொடுக்கும் செல்வமே வந்தனம்.

இருநிதி கல்வியும், செல்வமும். எழுநிதி ஏழு உடம்பின் ஏழு படிகளை கடந்து செல்லும் செல்வம். இவற்றோடு முத்தியாகிய விடுதலையும், சித்தியாகிய பெருவாழ்வும் சேருவதே நவநிதி திருநிதி என்பது மெய்ப்பொருளாகிய அருட்பெருஞ்ஜோதியை குறிக்கும.

688 எவ்வகை நிதிகளும் இந்த மாநிதியிடை
அவ்வகை கிடைக்கும் என்று அருளிய நிதியே

மேலே குறித்த நிதிகளைத் தவிர உலகத்தில் காணப் படும் மற்ற எல்லா வகையான செல்வங்களையும் மேற் குறித்த செல்வங்களிலேயே அடங்கி விளங்கும்படி செய்தருளிய செல்வமே வந்தனம்.

Koviloor Digital Library

689 அற்புதம் விளங்கும் அருட்பெருநிதியே
கற்பனை கடந்த கருணைமா நிதியே

பலவகையான அற்புதங்களை செய்வதற்கு வழிகாட்டும் அருட்பெரும்நிதியும் கற்பனைக் கெட்டாத நீண்ட காலம் நிலைத்திருக்கச் செய்யும் பெருங்கருணை நிதியே வந்தனம்.

மேன்மேலும் பலவகைச் செல்வங்களைப்பற்றி கற்பனை செய்து முயன்று அடைவதற்கு வழிகாட்டும் அருட்பெருஞ் ஜோதி.

690. நற்குண நிதியே சற்குண நிதியே
நிர்க்குண நிதியே சிற்குண நிதியே

எல்லாச்செல்வங்களிலும் சற்குணம் எல்லா செல்வங்களிலும் நல்லதன்மை. உண்மைதன்மை, உயர்ந்ததன்மை விளங்கும் தன்மைகளையுடைய செல்வமே வந்தனம்.

குணம்=பொருளின் தன்மை நிர்குணம் என்பதை குணமற்றது என்பர் சமயத்தவர், சமரசத்தில் பொருள் நிலைக்கடந்த அருள்நிலையைக் குறிக்கிறது.

691 பளகு இலாது ஓங்கும் பளிக்குமாமலையே
வளம் எலாம் நிறைந்த மாணிக்க மலையே

மறைப்பாகிய தவறு இல்லாமல் விளங்கிக் கொண்டே இருக்கும் பளிங்கு மலையாகவும், எல்லா வளத்தையும் தரும் மாணிக்க மலையாகவும் விளங்கும் வள்ளலே வந்தனம்.

பளகு=மறைப்பாகிய தவறு

692 மதியுற விளங்கும் மரகதமலையே
வதிதரு பேரொளி வச்சிரமலையே

மதிப்பு உண்டாகும்படி வளர்ந்து வரும் மரகத மலையாகவும், நிலைத்து இருக்கும்படி ஒளியைத் தந்து வரும் வைர மலையாகவும் விளங்கும் வள்ளலே வந்தனம்.

வதிதல்=தங்குதல். வைரம்=உறுதி

Koviloor Digital Library

693 உரை மனம் கடந்து ஆங்கு ஓங்கு
பொன்மலையே
துரியமேல் வெளியில் ஜோதி மாமலையே

வாக்கும் மனமும் செல்ல முடியாத நிலையில் ஓங்கியுள்ள பொன்மலையாகவும் துரிய அனுபவம் தரும் ஜோதி மலையாகவும் விளங்கும் வள்ளலே வந்தனம்.

மூளையில் வலம் இடம் என்ற இரண்டுபக்கங்களிலுள்ள இரண்டு பகுதிகளிலும் எழும் ஜோதி மலைகளை இணைக்கும் வீதியே முதலில் தோன்றும் என குறிப்பிடுகிறார் 'ஆணிப் பொன்னம்பலம்' பாடலில். இதுதான் மேல் ஆறுவது ஆதாரம்.

694 புற்புதம் திரை நுரை புரை முதல் இலதோர்
அற்புதக்கடலே அமுதத் தண் கடலே

நீரில் திரை, நுரை, புரைகள் சேர்ந்து அதன் மேற்பாகத்தை மறைக்கின்றன. இவைகளை நீக்கிப் பார்த்தால் தான் குறைகள் அற்ற அற்புதமான அருள் கடல் தெரியும். இவ்வாறு அமுதக்கடலாக விளங்கும் வள்ளலே வந்தனம்.

புற்புதம் = தோன்றி மறைவது, திரை = அலை புரை = குற்றம், நுரை = அழுக்கின் காற்று.

695 இருள் கலை தவிர்த்து ஒளி எல்லாம் வழங்கிய
அருட்பெருங்கடலே ஆனந்தக்கடலே

இருள் நுழைய முடியாதபடி பரிபூரணமான ஒளியுடன் அருள் கடலாக விளங்கும் இன்பகடலான வள்ளலே வந்தனம்.

696 பவக்கடல் கடந்துநான் பார்த்தபோதுஅருகே
உவப்புறு வளங்கொண்டு ஓங்கிய கரையே

பாவக்கடல்கள் அனைத்தையும் கடந்து நான் பார்த்த போது என் அருகே நெருங்கிவந்து மகிழ்ச்சியோடு எல்லாவற்றையும் தந்து கரையேற செய்தருளிய வள்ளலே வந்தனம்.

Koviloor Digital Library

697 என்துயர்ச் சோடைகள் எல்லாம் தவிர்த்து
நன்றுற விளங்கிய நந்தனக் காவே

துன்பம் என்கிற காடுகளை எல்லாம கடந்து என் மனதில்தெளிவாக விளங்கிய அன்பர்களின் செல்வ சோலையாக விளங்கும் வள்ளலே வந்தனம்.

சோடை=குறை தரும் வெப்பம்.

698 சேற்று நீர் இன்றி நல்தீஞ்சுவை தரும் ஓர்
ஊற்று நீர் நிரம்ப உடைய பூந்தடமே

சிறிது கூட சேறு கலவாமல் இனிய சுவையோடு ஊறி வருகின்ற அணைவரும் பருகும் அழகிய குளமாக விளங்கும் வள்ளலே வந்தனம்.

699 கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே
மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே

மிகத்துன்பமான வெயிலைத்தரும் கொடிய கோடையைக் கடந்து நிழலும் மேடையில் இனிய காற்றாக வீசும் வள்ளலே வந்தனம்.

மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே என்பது வான் ஆகாயக்காற்று அன்று. ஞான ஆகாயமாகிய சிரநடுவே வீசும் காற்று.

700 களைப்பறக் கிடைத்த கருணை நல்நீரே
இளைப்பற வாய்த்த இன்சுவை உணவே

களைப்பு சிறிதுமில்லாமல் இரக்கத்தின் விளைவாக உணர்வுநீராக பெருகும். அந்நேரத்தில் இளைப்பு இடையே வராது. அப்படி வராமல் உண்பதற்கு இனிய சுவை நீராகவும் உணவாகவும் மர்றும் வள்ளலே வந்தனம்.

நீரும் உணவும்முறையே தாகத்தையும், பசிஇளைப்பையும் நீக்குவன. வாயிலிருந்து நீர் ஊறி பேசுவதைபாடுவதை எளிதாக்குகிறது இதற்குமொழி சுரப்பி Lingual-

Koviloor Digital Library

ஜீவ) என்பர். இவற்ருேடு மேலும் ஐந்து ஜீவகாருண்ய பகுதிகள் உண்டு. 1. வறுமை நீக்கல் 2. பயம் தீர்த்தல் 3. நோய் தீர்த்தல் 4 இச்சை நிறைவேற்றல் 5. கொலை நீக்கல் என்பன. பசிநீக்கல், கொலை நீக்கல் பரஜீவ காருண்யம் மற்ற ஐந்தும் அபர ஜீவகாருண்யம் என்கிருர் பெருமான்'

701 தென்னைவாய்க் கிடைத்த செவ்இளநீரே
தென்னைவான் பலத்தில் திருகுதீம்பாலே

தென்னை இளநீரையும், தேங்காயையும் தருகின்றது. இளநீர் தாகத்தை போக்குவது போ நன்ருக முற்றியல் தேங்காயின் ஆற்றல் தருகின்ற பால் பசியை நீக்குகிறது. இவ்வாறு களைப்பையும் இளைப்பையும் நீக்குகிற தெங்காக விளங்கும் வள்ளலே வந்தனம்.

நன்றிக்கு எடுத்துக்கட்டாக தென்னை மரத்தைக் கூறு வர். 'நின்று தளராவளர் தெங்கு தாள் உண்ட நீரை தலை யாலே தான் தருதலால்' வேரின் மூலமாக பெற்ற நீரை தலையின் மூலமாக நமக்கு உணவாக மாற்றி தருகிறது.

மாங்காய் பால, தேங்காய் பால், என்றஇரண்டையும் குதம்பை சித்தர் இரு பொருள்களில் வழங்கி இருக்கிருர். மாங்காய் பால் என்பது நம் உச்சியில் இருக்கும் பொற் கோயில் தரும் அமுதத்தை குறிக்கிறது. மலை மீதிருக்கும் மலைப்பற்ற தெளிவான அருள் வாழ்க்கை வாழ்வே உயர்ந்தது. அதைவிட்டு உலகத்தில் கிடைக்கும் பலவகை இன்பங்களை தேடி அலைவது ஏன் என கேட்கிருர். இதை தேங்காய் பால் ஏதுக்கடி என்ற வினு விளக்குகிறது.

உலக இன்பத்தை தூய்மை செய்து கொண்ட பிறகு தான் படிப்படியாக இறை இன்பம் சேருகிறது. இதனை பாரமரம் என்ற சொல் குறிக்கிறது. (பரம் + அபரம்) பரம்—இறை இன்பம், அபரம்—உலக இன்பம் உலக இன் பத்தின் அடிப்படையில்தான் இறைஇன்பம் உருவாகிறது.

Koviloor Digital Library

அண்டபிண்ட பூரணபாவன அனுட்டான விதியும் ஜீவ காருண்ய ஒழுக்கமும் விளக்குகிறது.

702 நீர் நசை தவிர்க்கும் நெல்லியங்கனியே
வேர்விளை பலவின் மென்சுவைச் சுளையே

நெல்லிக்காய் இனிய நீரை வாயில் சுரக்க செய்கிறது. தாகத்தை தீர்த்து களைப்பை போக்குகிறது. வேர்பலவின் சுளை இளைப்பை நீக்கி ஆற்றலைத் தருகிறது. இவ்வாறு புற உதவியில்லாமல் எல்லாவிதமான களைப்பையும் இளைப்பையும் ஒருங்கே தீர்க்கும் வள்ளலே வந்தனம்.

703 கட்டுமாம் பழமே கதலிவான் பழமே
இட்டநல் சுவை செய் இலந்தை அம்கனியே

மாம்பழம், வாழைப்பழம், இலந்தைப்பழம் என்ற மூன்றும் முறையே செயல் திறன், நினைவுத்திறன், உயிர்த் திறன், என்ற மூன்றையும் தருவன. இவ்வாறு முத்திறல் வடிவம் தரும் முக்கனியே வந்தனம்.

செயல் திறத்தை கருமசித்தி என்றும், நினைவு திறத்தை யோகசித்தி என்றும் உயிர் உணரும் உணர்வு திறத்தை ஞானசித்தி என்றும் கூறுவர். பொதுவாக உலகத்தில் முக்கனி என்பது மா, பலா, வாழை, என்பர் பலா பழத்திற்கு பதில் இலந்தைக்கனி குறிக்கப்பட்டுள்ளது. சுவை தரும் பகுதி மேல் பாகத்தில் அமையும். பழத்தின் உள்ளே உள்ள (உயிரான) கொட்டைப்பகுதி நித்திய வாழ்வாகிய ஞான உடலை நினைவூட்டுகிறது. இட்ட நல்சுவை செய் இலந்தை அங்கனி இதனை விளக்குகிறது. கட்டுறுதியான உடலைக் குறிக்கிறது. கட்டு மாம்பழம், கதலி வான் பழம் உயர்ந்த நினைவு திறத்தைக் குறிக்கிறது, முத்திறல் வடிவ வித்தகத்தை இப்பாடல் விளக்குகிறது இட்ட நல்சுவை என்பது உயிர்ப்பணி புரிந்தே இன்புறுவதை குறிக்கிறது. விரும்பிய மனத்தைத் தரும் மனோரஞ்சித மலர் இங்கு நினைக்கத்தக்கது. இது தான் இன்டிருவம்.

Koviloor Digital Library

704. புனிதவான் தருவில் புதுமைமையாம் பலமே
கனி எலாம் கூட்டிக் கலந்த தீஞ்சுவையே

தூய்மையான உயிர்ப்பணி எங்கும் பரவி இருப்பதை குறிப்பது புனிதவான் தரு.வான் தரு என்பது நினைத்ததை எல்லாம் தரும் காமதேனு என்ற தேவதாரு மரத்தை குறிக்கும். அதனுல் புதிய புதிய ஆற்றல் தோன்றும் எல்லாக் கனிகளையும் சேர்த்து உருவாககிய இனிய சுவையையும் குறிக்குப. இவ்வாறு எல்லாவகையிலும் நித்திய வாழ்வை உருவாக்கி அருளும் வள்ளலே வந்தனம்

புதுமை டலம் என்பது புதுமை தரும் ஆற்றல். கனி எல்லாம் கூட்டி என்பது கனிகின்ற உள்ளங்கள் அனைத்தையும் இன்புறச் செய்யும் இறை அனுபவத்தைக் குறிப்பது. உருகி பெருகுதலே பெருவாழ்வு கூடியாகும்

705. இதம் தரும் கரும்பில் எடுத்த தீஞ்சாறே
பதம் தரு வெல்லப் பாகின் இன்சுவையே

இனிமைத் தருகின்ற கரும்பு நன்ருக முற்றிய கரும்பு அதை பிழிந்து எடுத்த சாறும், வெல்லப்பாகும் சேர்த்து பக்குவமான மணம் தோன்றும் அளவு காய்ச்சி எடுத்த பாகின் சுவைப்போல் இன்பம்தரும் வள்ளலே வந்தனம்.

இப்பாகின் சுவை ஐவகை அமுதில் ஒன்ருகும். 30-1-1874—ல் வள்ளற்பெருமான் ஒளி உடம்பு பெற்ற அன்று அன்பர்களுக்கு உபதேசம் செய்தார். அன்பர்கள் தக்க பக்குவம் அடைகிற வரையிலும் அவர்களை விட்டு விலகாமல் நின்று பக்குவம் வருவித்தே தீருவேன் என்ருர். பதம் தருவெல்லப்பாகின் இன்சுவை இங்கு கவனிக்கத்தக்கது. வெல்லப்பாகு நீர்த்த நிலையிலும், மிக இறுகிய நிலையிலும் வெல்லக்கட்டி செய்ய பயன்படாது.

பலர் கடினமான சித்தத்தோடு இறுகிய உள்ளத்தால் உயிர்ப்பணி செய்ய தவறுகின்றனர். உலகெங்கும் [illegible]

Koviloor Digital Library

வரம்பு கடந்து ஈடுபடுவதால் பிற உயிர்ப்படும் துன்பத்தை புறக்கணித்து விடுகின்றனர். இத்தகையோரை பக்குவம் வர செய்வதற்கு ஆணவ அச்சில் வார்ப்போம். ஆனாவிட்டால் மிடாவிலிட்டு வைத்து பக்குவம் வருவிப்போம் என்று எச்சரிக்கிறார்.

706 சாலவே இனிக்கும் சர்க்கரைத்திரளே
ஏலவே நாவுக்கினிய கற்கண்டே

சர்க்கரை உதிரியாக சுவை அநுமபில் படும்போது நாவில் நீர் ஊறி மிகவும் இனிக்கிறது. நன்கு திரண்டு காய்ந்திருப்பதால் தொடர்ந்து கரைய கரைய இனிமை தந்து கொண்டே இருப்பது கற்கண்டு சர்க்கரை போல திரண்டு தரும் இன்பத்தோடு, கற்கண்டைப் போல தொடர்ந்து கரையும இன்பம்தரும் வள்ளல வந்தனம்

"கரைந்து விடாது என்றும் அகத்தே இருந்து கனத்த சுவை தருகின்ற கற்கண்டே" என்பர் பெருமானை. கனத்த என்பது அழியா இன்பத்தை குறிக்கிறது. இனிப்பு வேண்டுமானால் புறத்தேயிருந்து இனிக்கும் பொருளை நாவி லிட்டுக்கொள்கிறோம். ஆனால் அது உடனே கரைந்து விடு கிறது. உள்ளேயே இருந்து தொடர்ந்து இறை இன்பம் கொடுப்பதை "கரைந்துவிடாது என்னா அகத்தே இருந்து கனத்த சுவை தருகின்ற கற்கண்டு" என்ற தொடர் குறிக் கிறது. ஏலவே என்பது புறத்தே இருந்து எதையும் ஏற்கா மல் அகத்திலிருந்து ஏற்றருளுமபடி என்பதை குறிக்கிறது. முன்னேற்றம் வெளியிலிருந்து வருவதில்லை. உள்ளே இருந்து அனகமாக விரிந்து நித்திய வாழ்வை அடைவதே முன்னேற்றம்.

707 உலப்புறுது இனிக்கும் உயர்மலைத்தேனே
கலப்புறு மதுரம் கனிந்த கோல்தேனே

கொம்பு தேனும், மலைத்தேனும் இங்கு குறிக்கப்படு கின்றன. மலைத்தேன் என்பது மலை உச்சிப் போன்று நம்

Koviloor Digital Library

சிரநடு உள்ள பொற்கோயிலில் தோன்றுகிற இன்பம். கொம்புத்தேன் என்பது பொற்கோயிலை அடுத்து ஜோதி தம்பத்தில் தோன்றுகின்ற இன்பமாகும். இவ்வாறு மேலாதாரங்களில் மூலாதாரமாகிய பொற்கோயில் தரும் இன்பம் அதனை அடுத்திருக்கும் சுவாதிட்டானம் என்கிற ஜோதி தம்பம் தரும் இன்பமுமாக விளங்குகிற தெய்வத் தேனே வந்தனம்.

இனிமை தருவதற்கு பல பொருளை ஒன்று கலப்பது உலகினர் வழக்கம். ஈங்கு இறைவனைத்தவிர வேறுஎதுவும் நித்திய இன்பத்தைத் தர இயலாது என்பதைக் குறிக்கிறது,

708 நவை இலாது எனக்கு நண்ணிய நறவே
சுவை எலாம் திரட்டிய தூய தீம்பதமே

குற்றமிலாது என்னிடம் நெருங்கி இருக்கும் தேனாக வும் எல்லாச் சுவைகளையும் திரட்டிய தூய இனிமையாக வும் விளங்கும் வள்ளலே வந்தனம்.

இங்கு பதம் என்பது பாதத்தை, திருவடியைக் குறிக்கும். தேன் என்பது ஆன்மநேய ஒருமைப்பாட்டுரி மையை குறிக்கிறது. பதப்படுத்தல், பண்படுத்தல் என லாம். திருவடிஞானம் ஆணவம் தீருவதால் உண்டாகிறது ஆணவம் தீர இரண்டு வழிகள் உண்டு. ஒன்று 'உயிருள் யாம் எம்முள் உயிர்' என்பதற்கு இணங்க உயர் நலப்பணி செய்து இறைவன் திருவருள் பெற்று இறைவன் இருதிரு வடிகளான அறிவை, அனுபவத்தை பெறுவது. மற்றது செயற்கையாக ஆணவமான கடின சித்தத்தோடு பிச்சை எடுக்க தொடங்கிய துறவிகள் நாலாவட்டத்தில் ஆணவம் அழிந்து அறிவும் அனுபவமுமான இறைவன் திருவடி களை பெறுகிறனர்.

'உள்ளத்தில் உள்ளே உள பல தீர்த்தங்கள் தெள்ளிக் குடைந்து நின்று ஆடார் வினை கெடார்'' என்பர் திருமூலர்

Koviloor Digital Library

இதுதான் ஊழை அகற்றுகின்ற உளவு ஆகிறது. உயிர்ப் பணி செய்கிறபோது தடித்த உள்ளம் கனியத் தொடங்கு கிறது. "துன்று மல வெம்மாயை அற்று வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்கும் சுகம்" என்பர் பெருமான்

709. பதம் பெறக் காய்ச்சிய பசுநறும்பாலே
இதம்பெற உருக்கிய இளம் பசுநெய்யே

பசும்பால் பதம் பெறும்படி காய்ச்சப் பெறும்போது தான் இனிமைத்தரும் நெய்யும்உருவாகிறது. இனிய பாலை பதமாகக் காய்ச்சி வெண்ணெய் திரளும் போது அதை எடுத்து உருக்கி நெய்யாக்கி இன்பம் அடைவதுபோல "வனிலை உருக்கி உள் ஒளிபெருக்கும் வள்ளலே வந்தனம்

இளம் பசு நெய்யால் ஏற்றிய விளக்கு மாசுபடிய விடாது. விளக்கில் கரிகட்டுவது சாதாரண எண்ணை யால்தான், "தெய்வத் திருமேனிக்கு மாசு படியாமலிருக்க தூய பசு நெய் கொண்டு விளக்கு ஏற்றுக" என்கிறார் அனுபவ மாலையில் இளமை மாறாமலிருக்கும் போதுதான் உண்மையான பெருவாழ்வு கிடைக்கிறது. "சாவா நிலை தான் மூவா நிலை" என்பர்

710. உலர்ந்திடாது என்றும் ஒருபடித்தாகி
மலர்ந்து நல் வண்ணம் வயங்கிய மலரே

உலர்தல், காய்ந்து வீண்போதல் என்ற நிலையில் தாழாமல் ஒரே நிலையாக மலர்ந்து நிறமும் மாறாமல் மணத்தோடு விளங்குகின்ற மலர் போன்ற வள்ளலே வந்தனம்.

நிறமும், மணமும் சேர்ந்த மலரையே போற்றுகின்ற னர். மணம் என்பது உயிர்ப்பணியையும், அறிவு விளக் கத்தையும் குறிக்கும். வாடா மல்லிகை நிறமுடையது, வாடாது, மணம் இல்லை. போலி கல்வி கற்றவர்க்கு பட்டம், படிப்பு இருக்கும் உயிர்ப்பணி மனம் இருக்காது.

Koviloor Digital Library

711. இகம்தரு புவிமுதல் எவ்வுலகு உயிர்களும்
உகந்திட மணக்கும் சுகந்த நல்மணமே

மணம் இருவகைப்படும். சாதாரண மக்கள் நுகரும் மணம் ஒருவகை. மிக நுட்பமாக நுகரும் ஆற்றலை வளர்த்துக்கொண்ட சான்றோர் அடையும் மணம் வேறு, இவ்வாறு உலக அனுபவமுடைய உயிர்களும் உயிர் அனுபவம், அருள் அனுபவம், இறை அனுபவம் உடைய உயிர்கள் நுகரும் மணம் வேறுபட்டிருக்கின்றன. இவ்வாறு எல்லா உயிர்களுக்கும் ஏற்றபடியெல்லாம் இன்பம் தந்தருளும் வள்ளலே வந்தனம்.

எல்லா உயிர்களும் இன்புற மணக்கும் இனிய மணமாக விளங்குவதுதான் கடவுள் அனுபவம்.

712. யாழுறும் இசையே இனிய இன்இசையே
ஏழுறும் இசையே இயல் அருள் இசையே

யாழ் இசைக் கருவி, அதைவிட இனிய இசையை தருவது குழலிசை. அடுத்த நிலையில் ஏழு இசைகளும்சேர்ந்தது பண்இசை. எல்லாவற்றிற்கும் மணிமுடி சூட்டியதுபோல அனைத்தையும் ஈர்க்கின்ற, இயக்குகின்ற இசை அருள்இசை இவ்வாறு எல்லாம் விளங்குகிற வள்ளலே வந்தனம்.

713. திவள் ஒளிப்பருவம் சேர்ந்த நல்லவளே
அவளொடும் கூடி அடைந்தது ஓர் சுகமே

திவள் என்பது தோன்றிநின்று அசைகின்ற ஒளி, இது இளமையை குறிப்பதோடு தூய்மையையும் குறிக்கும். தாய் குழந்தைக்கு பால் தரும்போது குழந்தைக்கு மட்டும் இன்பம் தரவில்லை. தானும் இன்பம் அடைகிறாள். இவ்வாறு இளமை குலையாத, அருள்ஒளித் திருவாகவும் அதனோடு இணைந்து அன்பு மயமாக உயிரைப் பேணும் இன்பவடிவமும் கொண்ட வள்ளலே வந்தனம்.

Koviloor Digital Library

கட்டிகையில் உனக்கு மணம் புரிவிப்போம் நீ மணமகன் கோலத்தில் தயாராக இரு என்று பேறடைவு என்ற பதி கத்தில் இறைவன் சொன்னதாக வள்ளலார் குறிப்பிடு கிருர். இறுதியில் ஒளி உடம்பை பெறுவதற்குமுன் பல மாதங்கள் உண்ணுமலும், உறங்காமலும் இருந்தபோது மணப்பந்தலிட்டு கமுகு முதலியவற்ருல் அணிபெற மாலை யிலிட்டு மணக்கோலத்தோடு இருந்து ஒளி உடம்பை பெரு மான் பெற்றிருக்கிருர் என்ற வரலாறு குறிப்பிடத்தக்கது. அவள் என்பது கனிவு மயமான இறைவனேயே குறிக்கிறது அம்மையப்பன் என்ற கருத்து குறிப்பிடத்தக்கது, பொது வாக பலரும் காணும் ஆண் பெண் கூட்டுறவை இது குறிக்கவில்லை ஒரு மடந்தை என்ற பாடல் இங்கு குறிப் பிடத்தக்கது.

714. நாதநல் வரைப்பின் நண்ணிய பாட்டே
வேத கீதத்தில் விளேதிருப் பாட்டே

நாதநல் வரைப்பு, வேதகீதம் என்ற இரு பாடல் இங்கு குறிக்கப் படுகின்றன. மிக நுண்ணிய ஒலியிலிருந்து லுந்தாவது ஒலி வரையில் உயரும்போது மயிலும குயிலும் ஒருங்கே தோன்ற திருவருள் பாலித்த வள்ளலே வந்தனம்

715. நன்மார்க்கர் நாவில் நவிற்றிய பாட்டே
சன்மார்க்க சங்கம் தழுவிய பாட்டே

திருப்பாட்டு என்றும், அம்பலப்பாட்டு என்றும் பாடல் இருவகைகளாகும். முதல் பாட்டு நன்மார்க்கர் நவிலும் பாட்டு, அடுத்த பாட்டு சங்கத்தார் தழுவும் பாட்டு, தனிப்பட்டவரை உருவாக்கி தங்கத்தைப் போன்ற அவர்கள் கூட்டத்தையும் உருவாக்கி அருளு பவரே வந்தனம்.

பாடல் மட்டுமே இன்பம் தருவது அன்று. தனிப்பட்ட வரை உருவாக்குவது, சங்கத்தையும் உருவாக்கிவளர்ப்பது என்பது கவனிக்கத்தக்கது, வேலை செய்கின்றபோது பாடிக்

Koviloor Digital Library

கொண்டே வேலை செய்தால் வேலையில் ஏற்படும் களைப்பு தீருகிறது. வேலையும் சிறம்பட செய்ய இயலுகிறது. அதனால் தனிப்பட்டவரின் பாடலுக்கும், குழுவின் பாடல்களுக்கும் உள்ள தொடர்பை புரிந்துகொள்ளவேண்டும்.

716. நம்புறும் ஆகமம் நவிற்றிய பாட்டே
எம்பலம் ஆகிய அம்பலப் பாட்டே

ஆகமம் என்பது உயிர்ப்பணி செய்யும் இளநிலை உள்ள முனைடய சித்தாந்த செல்வர் வாழ்வை குறிக்கிறது. அவர்கள் பாடும் பாட்டு எனக்கும் ஆற்றலை தந்தது. இவ்வாறு என்னை ஆளாக்கி வரும் வள்ளலே வந்தனம்.

எம்பலம் என்ற சொற்றொடர் உலகம் பலவிதம் என்ற சொற்றொடரோடு சேர்த்து உணர தக்கது. வேலை செய்வதற்கு வேண்டிய அளவு நம்பிக்கை கொள்ள செய்வது நம்புறும் ஆகமம் பாட்டு. அந்த நம்பிக்கையோடு வளரும் ஆற்றலைக் கொண்டு உலகு அம்பலவிதமே செயல்படுகிறது. இறைவன் திருவருளால் மட்டுமே உலகம் இயக்கப்படுகிறது என்று புரிந்துக்கொள்ள வைப்பது தான் அம்பலப் பாட்டு, இதனை சிதம்பர பாட்டு, பொன்னம்பலப்பாட்டு, திருப்பாட்டு என்றும் மெய்ப்பொருள் தரும் பாடலே பாட்டாகும் என்றும் பெருமான் வலியுறுத்தியிருக்கிறார்.

717. என் மனக்கண்ணே என் அருள் கண்ணே
என் இரு கண்ணே என் கணுள் மணியே.

இங்கு ஐந்து கண்கள் குறிக்கப்படுகின்றன. அவற்றுள் புறக்கண்கள் 2, மனக்கண், அருள்கண் ஆகிய அகக்கண்கள் 2 இந்நான்கு கண்களுக்கு கண்ணாக விளங்கும் காரணக்கண்ணாக விளங்கும் வள்ளலே வந்தனம்.

கண்ணின் உள்ளே வெளிச்சம் செல்லும்படி அனுமதிக்கின்ற உள்கண் இறைவனைக் குறிப்பிடுகின்றது. இதையே என் கண்ணின் மணியே என்கிறார். இதிலும் இரண்டு பகுதி

Koviloor Digital Library

கள் உண்டு. ஒன்று தூலமான பாப்பா என்பது, மற்றொன்று சூட்சுமமான உள் ஒளிக் கண், ஆக ஆறு கண்கள் குறிக்கப்படுகின்றன. இவை பரிபூரணமான ஆறுதலை தரும் கண்களாகும்.

இருகண் என்பதும் இரு பொருள் உடையது. புறக் கண்கள் இரண்டை குறிப்பது ஒன்று, மற்றது நிலைத்து வாழும்வழிகாட்ட வல்லது. இதை இருகண் என்ற வினைத் தொகை நினைவு படுத்துகிறது, அதை விரிக்க இருந்த கண், இருக்கின்ற கண், இருக்கும் கண் என பிரியும், இம் மூன்றும் மூன்றுவகை அனுபவங்களைக் குறிக்கும். எனவே புறக்கண் 4, அகக்கண் 3 என தொகைபெறும்போது உள்ள பஞ்சகமும், திருச்சிற்றம்பல தெய்வமணி மாலையும் நினைவிற்கு வரும். இரு கண்களிலும் பாப்பா இரண்டு உள்ளது

உயிருக்கு உயிராக இருப்பவன் இறைவன். அவர் உயிரின் ஒளியாகிய மனத்தின் கண்ணாகவும் விளங்குகிறார். உயிர் அருள்பணியில் ஈடுபடும்போது அங்கிருந்து அனகமாக மலர்ந்து அருள் கண்ணாகவும் விரிகிறார், அந்த அருள் ஒளி புறக்கண்களிலும் விரிகிறது, கண்களின் கண் மணியான பாப்பாக்களிலும் விரிந்து பரவி ஒளிர்கிறது

718. என்பெருங்களிப்பே என்பெரும் பொருளே
என் பெருந்திறலே என்பெரும் செயலே

களிப்பு, பொருள், திறல், செயல் என்ற நான்கும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடன் விளங்கும்படி செய்தருளும் வள்ளலே வுத்தனம்.

இன்பம் தோன்றிய பிறகுதான் பொருளும்: திறலும், செயலும் தோன்ற முடியும். இன்பம் பேரின்பமானால் மற்ற மூன்றும் உயர்ந்தவைகளாகவே அமையும். அறம், பொருள்; இன்பம் என்பர் சமய கணக்கர் இன்பம், பொருள், அறம் என்பது சன்மார்க்க உண்மை. உள்ளி

Koviloor Digital Library

ருந்து இறைவன் அனகமாகி உடலில் விரிகிறார், இதனால் ஏற்படும் இன்பம் பெரும் இன்பம் ஆகிறது, இந்த பேரின்பம் பெரும் மதிப்பாகிய பொருளைத் தருகிறது. இதனால் பெருந்திறமை ஏற்படுகிறது. இத்திறமை ஒப்பற்ற பெருஞ்செயலான முத்திறல் வடிவத்தை கொடுக்கிறது.

719. என் பெருந்தவமே என்தவப் பலனே
என்பெருஞ் சுகமே என்பெரும் பேறே

விடா முயற்சியும், அதன் விளைவும், இன்பமும் சேர்ந்து பெருவாழ்வெனும் பெரும் பேருக விளங்கும் வள்ளலே வந்தனம்.

தவம் என்பது விடாமுயற்சி—அதன் பயனே நித்திய இன்பமாயும். வாழ்க்கைப் பேருகவும் விளங்குகிறது.

720, என்பெருவாழ்வே என்றன் வாழ்முதலே
என் பெருவழக்கே என்பெருங்கணக்கே

வாழ்க்கையும், அதன் அடிப்படையும், அதை மேற்கொள்ளும் வழக்கமும், வரம்பும் தோன்றுகின்றன. இவ்வாறு எல்லாவற்றிற்கும் பெரும் வரம்பாக விளங்கும் பெருங்கணக்கே வந்தனம்.

கணக்கு இருவகை உண்டு. மேல் கணக்கு கீழ்கணக்கு என்பன. இறை இன்பம் தரும் கணக்கே மேல்கணக்கு. இக் கணக்கை கல்லாதவரே கல்வி கல்லாதவர். ''கணக்கறிந்தார் கல்வி கற்று அறிந்தாரே'' என்பர் திருமூலர்.

721. என்பெரும்நலமே என்பெருங்குலமே
என்பெருவலமே என்பெரும் புலமே

நலம், குலம், வலம், புலம் என்ற வாழ்க்கையின் நான்கு எல்லையாக விளங்கும் வள்ளலே வந்தனம்.

நலம் என்பது நடுநிலை தவறாதது. குலம் என்பது கொள்கையுடையவர்களையே குறிக்கும், வலம் என்பது

Koviloor Digital Library

ஆற்றலை குறிக்கும். புலம் என்பது அறிவை குறிக்கும். ஆற்றலை அடைவதற்கு ஒரே வழி உயிர்ப்பணி செய்வது தான், நாம் உதவும் உயிர்களின் தொகை பெருகப்பெருக நம்முடைய குலமும், ஆற்றலும், அறிவும் வளர்ந்து கொண்டே இருக்கும்.

722, என்பெரு வரமே என்பெருந்தரமே
என்பெரு நெறியே என்பெருநிலையே

இறைவனிடம் பெறும் வரம் உயர்தரமான வழியைக் காட்டும். இத்தகைய பெருநெறி பேற்றில் நின்று பெருநிலையை வழங்கும் வள்ளலே வந்தனம்.

பெருநிலை என்பது பெருவாழ்வைக் குறிக்கிறது. இதற்கு அருள்செயலால் விளங்கும் வரமும் வழியும் இன்றியமையாதவை.

723, என்பெருங்குணமே என்பெருங்கருத்தே
என்பெருந்தயவே என்பெருங்கதியே

குணம், கருத்து, தயவு, கதி இந்நான்கிலும் பெருநிலை வழங்கி அருளும் வள்ளலே வந்தனம்.

குணம் என்பது பொருளின் தன்மை, கருத்து என்பது பொருளைப்பற்றிய எண்ணம் தயவு என்பது பிற உயிருக்கு இரங்கி உதவுதல், கதி என்பது இபக்கம், அடைக்கலம்,

724, என்பெரும் பதியே என் உயிர் இயலே
என்பெருநிறைவே என் தனி அறிவே.

பதி, இயல், நிறைவு, அறிவு என்ற நான்கும் தெய்வமயமாக விளங்கும்படி செய்தருளிய வள்ளலே வந்தனம்.

பதி இறைவன், இயல்-தன்மை, நிறைவு முழுமை இம்மூன்றில் எது குறைந்தாலும் முழு அறிவு உருவாகாது. பதி என்பது எதையும், அழகாகத் திருத்தமாக பதிய செய்வது.

Koviloor Digital Library

1956-ம் வருஷத்திய ரிஜிஸ்தரேசன் ஆப்நியூஸ்பேப்பர் (சென்ட்ரல்) விதிகளில் 8 வது விதிப்படி 'வள்ளலார் அருளுரை' என்ற இதழ் பத்திரிகையின் உடமையாளர் பற்றிய விவரங்கள் பிரசுரிக்கப்படுகின்றன.

பாரம் 4

(1) பிரசுரிக்கப்படும் இடம் ... சென்னை

(2) பிரசுரத்தின் தன்மை ... திங்களிதழ்

(3) அச்சிடுவோர் பெயர் .... எம். செல்வராஜ் இந்தியர், பரணி அச்சகம் 77, வெங்கடாத்திரி தெரு, சென்னை-12

(4 பிரசுரகர்த்தர்,
ஆசிரியர் பெயர் ... S. இராசன்
எத்தேசத்தவர் ... இந்தியர்
விலாசம் ... 77, வெங்கடாத்திரி தெரு, குயப்பேட்டை, சென்னை-12

(5) இப்பத்திரிகையின் சொந்தக்காரர் பெயர் விலாசம் மொத்த முதலில் நூற்றுக்கு ஒன்றுக்கு மேல் முதல் போட்டுள்ள கூட்டாளிகள், பங்குதாரர்கள் பெயர்கள், விலாசங்கள் ... S. இராசன் (பூரண உரிமையாளர்) 77, வெங்கடாத்திரி தெரு, குயப்பேட்டை, சென்னை-12.

——

S. இராசன் என்ற நான் இதன் மூலம் தெரிவித்துக் கொள்வது மேலே கொடுக்கப் பெற்றுள்ள விவரங்கள் அனைத்தும் நான் அறிந்த மட்டில் உண்மை.

3-3-1990

S. இராசன்
பிரசுரகர்த்தர்

Koviloor Digital Library

பேராசிரியர் திரு. வடலூர் முத்துராமலிங்கம் எழுதிய

வள்ளலார் விஞ்ஞானம் விலை ரூ 6-00

வள்ளற்பெருமான் கொள்கையின் பரிணமம் விலைரூ.1-20

... வாழ்வு வழங்கும் சுத்த சாதகம் விலை ரூ. 1-20

அனுப்புதல்:— வள்ளலார் அருளுரை

சிறப்பாசிரியர் க. கிருஷ்ணமூர்த்தி

21 நீட்டித் தோட்டம் மூன்றுவது தெரு, பெரம்பூர், சென்னை-600 011.

ஆண்டு சந்தா ரூ. 12-00 நிரந்தர சந்தா ரூ. 120-00

Regd No. T/NMS(N) 427 வள்ளலார் அருளுரை

ஆசிரியர், வெளியிடுபவர் S. இராசன் & அச்சிடுபவர் திரு M. செல்வராஜ் பரணி அச்சகம் 77 வெங்கடாசலத் தெரு, குயப்பேட்டை. சென்னை-12. போன் 664227

கோவிலூர் KOVILOOR MADALAYAM